உ

கடவுள் துணை.

# சதாசார தீபிகை.

---

பூதபால சாலசுந்தரனவர்களால்

ஸ்ரீவித்தியா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்ட

சிதம்பரம்

1892.

Price an anna.

விலை அணா 1.

ஸ்ரீ சு. சுப்பிரமணிய ஐயர், B.A.

அவர்களின்

அன்பளிப்பு

௳

குருப்யோநம:

# சதாசார தீபிகை.

[illegible]
[illegible]

யாம் ஸ்ரீலக்ஷ்மிபிராட்டியாரது கணவனைக்கருத்தி
ண்டுத்தி அவரது ஆஞ்ஞாவாக்கியங்களாகிய வேதங்களி
ம்ஸ்ருதி தர்மசாஸ்திரங்களிலும் கண்டபடி ஆரியர்களின் நி
த்யக்கிரியாதர்மங்களைப்பற்றிச் சிறிது எழுதப்புகுவாம்.

சிலகன்மங்களுக்குப்பயன்யாம்காணக்கூடியதும், கூ
டாததுமானதாகவேற்பட்டது. சிற்சிலகன்மங்கள்யாமகா
ணக்கூடியபயன்களையே பெற்றன. காணக்கூடியபயன்
என்பது, இவ்வுலகத்தின்கண் இதேவுடலிலனுபவிக்கப்படுவ
து. காணக்கூடாப்பயனெனில், நூலாராய்ச்சியானும் நு
ட்பறிவானும் மறுவுலகங்களினும் மறுபிறப்புகளினும் பெ
றத்தக்கன. இனி உதயகாலாசாரங்களைக் கூறுவாம்.

இரவு இருபத்தைந்துநாழிகைசென்றபின்னர் நித்தி
ரைசெய்யக்கூடாது. அக்காலத்திற்குச்சந்தியாகாலமெனப
பெயர். அக்காலத்தில் நித்திரைமுதலியவைகளை அனுட்டி
த்தால் நமக்குண்டாகும் தீப்பயனைப்பற்றி ஸ்ருகன்மனு
தமதபிப்பிராயத்தைக் கீழ்வருமாறு வெளியிடுகின்றார்.
"சந்தியாகாலத்தில நித்திரையால தௌர்பாக்கியமும், ப
டித்தலால்ஆயுட்குறைவும், அன்னமருந்தலாலவியாதியும்,
மைதுனத்தால காபபத்திற்கழிவுமுண்டாம்" எ
ன்று. ஆதலால அக்காலத்திலுறங்காது விழித்திருக்கவே

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

ண்டுமென்று ஏற்பட்டது. இவ்விழித்தலென்னுமாசாரம் யாம் காணக்கூடியபயன்களை இயக்குவதால் இஃதுதிருஷ்டபலமெனவேற்படும்- "விடியற்காலத்தில் தேவதைகளும், பிதிருக்களுமொன்றுசேருவார்களாதலால், அக்காலம்விழித்திருத்தல் பிதிருதேவதைகளைக்கனப்படுத்தலாகும்" என்பதால், அக்காலம்யாம்காணக்கூடாத (பிதிருக்களைக் கனப்படுத்தல்) பயன் அக்கன்மத்திற்கு வெளியாவதால் அது அதிருஷ்டபலமெனக்கூறப்படும். ஆயினிக்கன்மமிருவகைப்பலன்களுடைத்து இனிஆயுள்வேதத்தையறிந்தோர் அக்காலத்தில்விழித்திருத்தல் அனுபவித்தமென்னும்நோய்வகைப்பித்தத்தை அழிக்கும்வழியெனச்சாதிக்கின்றார். அக்காலத்தில் வாளாவிழித்திருக்காதுகடவுக் கருத்திலிருத்தி இல்லற நற்பொருட்களைப்பற்றிச்சிந்த்தல் வேண்டும். அம்மேத தருமார்த்தங்களின்கருத்து. இராக்காலத்தை ஆறுகூப்பகுத்து அதின்கடைப்பகுதியில் தமதுஇல்லறத்துணைவியுடன் விழித்துக்கடவுளைத்துதித்துத் தருமார்த்தங்களைச் சிந்திக்கவேண்டுவது" என்றறிக.

விழித்தவுடன் கேள்வியறிவுடைய அந்தணர்களையேனும், அல்லது கற்புடைய மங்கையரையேனும், பசுக்களையேனும், வேறெந்த மங்களபதார்த்தத்தையேனும் பார்த்தல் வேண்டும் கற்புநிலைமைகடந்தவர்களையும் [illegible] எவ்விதப்பாவிகளையும் நிர்வாணிகளையும், அங்க[illegible]களையும், பார்த்தல்கூடாது (நிர்வாணிகளென்றலகு[illegible]நிர்வாணிகளல்லர்; அவர்களைக்காண்டலும்குற்றமல்ல. [illegible]து வயதுமுதல் உடைகளைத்தரிக்கவேண்டுமாறுஉபநயனத்திலோ ரங்கமேற்பட்டிருப்பதால் அக்காலத்திற்குப் பின்னரே அவர்களுக்கு உடை அவசியமெனக்கொள்க) எழுந்தபிறகு கீழ்த்திசையேனும் வடதிசையேனும் நோக்கிச் சிறிதுதூரம்

செல்ல வேண்டும். அத்திசைகளில் பூரணமான தடாக
முதலியவை இராவிடில அவையிருக்குந் திசை
நோக்கிச்செல்லுதலவசியம்; பகலில் வீடுகளடர்ந்திருக்கு
மிடத்தைத் தூரத்திலொதுக்கித் தன்சரீரவியாபாரங்க
ளை நடத்திக்கொள்ளல்வேண்டும். காய்ந்த புல்படிந்த ம
ண்தரைகளில், சந்தியாகாலங்களிலும்,பகற்காலங்களிலும்
வடக்குநோக்கியும், இரவிலதெற்குநோக்கியும், தேக
பாதையை நிவர்த்திசெய்துகொள்ளலவேண்டும். இவ்
விதி ஆபத்துக்காலத்திற்குற்றதல்ல. ஆபத்துக்காலத் தில்
எத்திசைநோக்கியேனுமிருத்தல குற்றமாகாது. வஸ்தி
•ரத்தால நாசி வாய், சிரசு இவைகளைச் சுற்றிமூடிக்கொ
ண்டு தேகத்திலுமமூடக்கூடியபாகங்களை அங்ஙனமேமெ
ய்யூகொண்டு அக்கினி, சூரியன். சந்திரன, பசு தானியம்
; சந்தியை(அதாவதுகாலையில்கீழ்த்திசையும, மாலையில
மேற்றிசையுமெனப்பதுகருத்து) தீர்த்தம்(அதாவதுகுள மு
தலியவை)ஸ்திரீகள், தேவாலயங்கள், காற்று, அந்தணர்
இவர்களுக் கெதிர்முகமாயுட்காராது, தமதுபூணூலைத்தா
வடமாகத் தரித்து மலசலமகற்றிதலவேண்டும. இதற்கு
த்தகாதவிடங்கள் -உழுதநிலம-தடாகமுதலியஜலம, மலை,
தேவாலயம், புற்று, ஆற்றங்கரை, தேவாலயங்களு
க்கருகாமை, பிராணிகள் நிறைந்த பள்ளம் ஆகியஇவை
களே.•

தமது பூணூலை மாலையாகத் தரித்தலின்றி ஒரு கால
மும் மலங்கழித்தல்கூடாது. அறியாமையால அங்ஙனம்
செய்ய நேரிடின் அப்பூணூலைத்தள்ளிப் பிறிதொன்
றைக் கொள்ளலவேண்டும். ஒரே வஸ்திரந் தரித்திரு
ப்பவன் தன் பூணூலையாவது வலது செவியிற்றரித்தல
அக்காலத்துக் கின்றியமையாததாம். தைலக்காப்பு

வபனம் புணர்ச்சி முதலிய கிரியைகளில் உடனே ஆசமன விதியின்படி தண்ணீருட்கொண்ட பிறகே தன்னுடலினின்றும் மலங்களைக கழித்தல்வேண்டும். அக்காலத்தில் ஒன்றும் பேசுதல் கூடாது. மலங்களையும் மற்றைய அசுசியுள்ள பதார்த்தங்களையும் உற்றுநோக்குதல் கூடாது. பணக்கவலையுற்று வீணில நெடுங்காலம் அசுசியான இடங்களில் உட்காரலாகாது. சிறுபாத்திரங்களில எடுத்த தண்ணீரைக் கொண்டே மலங்களை நீக்கிக்கொள்ளல் வேண்டும். அத்தண்ணீர் முன்னரே எடுக்கப்பட்டும சுத்தமானவிடத்தில் வைக்கப்பட்டதாய் இருத்தலவேண்டும். மிருத்திகையும் தண்ணீரும் அவ்வசுசிகாலத்திலகை யிற்றரித்தல்கூடாது. அம்மலங்கள் உடலில் மற்றெவ்விடத்திலும் பற்றாது ஐயமுற முற்றிலுமொழியத் தண்ணீர் மண முதலியவற்றால் சுத்திசெய்தல்வேண்டும்.——வழியில்ஐந்து முறையும்——குறியில் இரண்டுமுறையும் கைகளிலும் காலகளிலும் ஏழுமுறையும் மணணினால் சுத்திசெய்தலவேண்டும். இச்செயலுக்குக்காணக்கூடியபயன் துர்காற்றம் நீக்குதல். இனி மனம் சுத்திபெற்று மேல்முடிக்கவேணடிய கடன்களை முடிக்க அதிகாரத்தைஉண்டாக்குதல் இதில ஊக்கமுள்ளோர் அறியத்தக்கஉட்பயன். இனிஅனேக தர்மசாஸ்திரங்களில் மண்ணிடலைப்பற்றிபபற்பல வேறுபாடுகள் காணப்படினும் அவை அவ்வவ்விடத்தின் தாரதமமியங்களாலென்றறிந்து ஒன்றுடனொன்று முறணாது பொருள்படுத்தி அந்நெறியின்ஒழுகுதலவேணடும. அதுபற்றியே "விகனஸ்" என்னும்முனிவர்தாம் எழுதிய சூத்திரத்தில "அவ்வமண்ணின் ஆற்றலறிந்து நாற்றமறமனோவிகற்பநீங்க மண்ணிடலவேண்டும்" என்றார் இனித்தண்ணீர் எடுக்கப்பாத்திரங்கிட்டாவிடிலஓடுகி

ன்றதண்ணீருக்கு ஒருமுழதூரத்திற்கப்பால் உட்கார்ந்து கையினுல் தண்ணீர் எடுத்து அக்கருமத்தைச்செய்தல வேண்டும். பின் அவ்விடத்தை எவ்விதத்திலேனும் சுத்திசெய்துவிடுதல்வேண்டும்-இதேகருத்தை "விவஸ்வாண" என்பவர் வெளியிட்டிருக்கின்றார். 'தண்ணீருக்கப்பால் ஒருமுழதூரத்திலுட்கார்ந்து சௌசவிதியை முடித்துப் பின் அவ்விடத்தையும் சுத்திசெய்தல்வேண்டும்" என்று.இதுபொதுவிதியாம். இரவிலும், மார்க்கங்களிலும் எவ்விதமேனும் சரீரத்துக்கு ஓர் சுத்திசம்பாதித்தல்வேண்டும். ஆதலினாலன்றோ 'சுசியுள்ளோனைக் கடவுளர் பிதுர்க்கள் பின்பற்றுவார்கள். மற்றை இராக்ஷதர்கள் பைசாசர்கள்இவர்களைவிட்டுநீங்கிவிடுவர்" என்று ஆன்றோர்கூறுவர். சரீரசுத்தியினும்மனச்சுத்திபெறுதல உயர்வுடைத்தென்று ஆசிரியர் தக்கர் கூறுகின்றார். ஆதலால் எவ்விதசரீரசுத்திக்கும் மனச்சுத்திஇன்றியமையாததாம். அச்சுத்தி உலகெலாங்கடந்தஉண்மைப்பொருளாய அப்பரவஸ்துவின் தியானத்தாலன்றி வேறெவ்வாற்றானும் நிலைபெறாதென்பது ஆசிரியர் வாதராயணர் சாற்றும்மெய்யுரையாம். அஃதாவது: "சரீரசுத்திபெற்றவ னேனும் பெறாதவனேனும் எவ்வவத்தையில் இருப்பினும் எவன் கமலக்கண்ணனைக் கருதுவானோ அவன் உள்ளும், புறம்பும் அத்தியந்த சுத்தன் என்பதாம். பின்கச்சையைஇறுக்கி நின்றுகொண்டு இடப்புறந் திரும்பி வாய்கொப்பளித்தல் வேண்டும். இதனை விதித்தது நமது முகத்தின்உட்புறத்திலுள்ள மலங்களை நீக்குதலால் நாம் காணக்கூடியபயன்பெற்றது. அதை இடப்புறத்தே செய்தல்வேண்டுமென்று கூறியதுமட்டில் அறிஞர்க்கேபுலப்படும் பயன்பெற்றதாம். சரீரத்தின்வலப்புறத்தில்தேவதைகள்பிதி

க்கள் ரிகவுதில்முதலியோரிருப்பதால் அவர்களிடம் ஓர்கு
ற்றம்பெறுமல் தண்ணீரை மற்றவிடம் கொப்பளித்தல் வே
ண்டுமென்பது நூலாசிரியர் கருத்து. மலநீக்கத்திற் பன்னி
ரண்டுமுறையும் சலநீக்கத்தில் நான்குமுறையும் கொப்பளித்
தல்வேண்டும். உடனே கீழ்த்திசை அல்லது வடதிசை
யை நோக்கிக் கையைக்குவித்துக் கடவுளை நினைத்து ஓர்
உளுந்தமிழ்ந்த சலத்தை உட்கொள்ளல் வேண்டும். இ
க்கருமம் ஆசமனம்மென்று சொல்லப்படும். இதைத்த
ண்ணீரில் நின்றுகொண்டும் தரையில் உட்கார்ந்துஞ்செ
ய்தல் வேண்டும், தண்ணீரில் ஓர் காலும் மற்றோர்கால்
கரையிலும் வைத்தும் செய்யலாம். மூன்றுதரம் ஆசம
னஞ்செய்தபிறகு பெருவிரலடியால் இருமுறை உதடுக
ளைக் துடைத்தல்வேண்டும். பெருவிரலையும் மோதிரவி
ரலையும் கூட்டிக் கண்களையும் பெருவிரலையுஞ்சுட்டுவிரலை
யுங் கூட்டிக் காதுகளையும் எல்லாவிரல்களாலும் மார்பை
யும் பெருவிரலால் சிரத்தையும் தொடுதல்வேண்டும். மே
ற்குறித்த எல்லா அவயவங்களையும் பெருவிரலால்தானே
தொடினும்தொடலாம். "பைடீனசி" யென்பவர் "அக்கி
னி பெருவிரலிலிருத்தலால் அதுகொண்டே எல்லா அவ
யவங்களையும் தொடலாம்" என்று விதித்தார். இடையில்
தரித்த உடை உலர்ந்திருந்தால் தண்ணீரில் உட்கார்ந்
தும் அங்ஙனமில்லையாயின் நின்றுகொண்டும் ஆசமனஞ்
செய்தல்வேண்டும். மற்றோர்கருமத்துக்கு அங்கமாக ஆசம
னஞ்செய்ய நேர்ந்தால் அதைக் கையிற்பவித்திரமணிந்தே
செய்தல்வேண்டும். இவ்வாசமனம் அகச்சுத்திக்கருவியா
தலால் இதன்பயன் அறிதற்கரியதேயென்க. ஆசமனீயம்
செய்தபிறகு அப்பவுத்திரத்தை அவிழ்த்தெறிந்துவிடு
தல்வேண்டும். எக்காலத்தும் பொன்னாலமைத்தபவுத்தி

ரம் தரிக்கத்தக்கதே. வெள்ளியால் ஒரு மோதிரஞ் சுட்டுவிரலில் அணிதல் வேண்டும். பிதுர் தேவதைகளுக்கு வெள்ளி மிகப்பிரீதியுள்ளதாதலாலும் அதில் விழும் தண்ணீரே அவர்க்குப் பயோகமாகும்படி நேருமாதலாலும் அதை அவ்விரலிலேயே தரித்தல் அவசியகமாம். தண்ணீர் கிடையாதவிடத்துத் தனது வலது காணத்தைத் தொட்டால் அதுவே ஆசமனீயமாகும். அவ்விதம் செய்தல் வேண்டுமென்பதைச் சந்திரிகையென்னும் ஓர் நூல் விளக்குகின்றது. அஃது "ஜப ஹோமகாலங்களில் நீசர்களைக் கண்டாலும் மற்றை நாய்முதலிய இழிந்த ஜீவஜந்துக்கள் தீண்ட நேர்ந்தாலும் உடனே ஆசமனீயம் செய்தல் வேண்டும். அல்லது வலக்காதைத் தொடுதல் வேண்டும்." என்பதாம். சம்வர்த்தரென்பவர் "தும்மல், காறி யுமிழ்தல், பற்கடித்தல், பொய்சொல்லல் பதிதரோடு பேசுதல் என்னும் இச்சமயங்களில் வலது காதிற்றொடுதல் வேண்டும்" என்று கூறியிருக்கின்றார். எத்தொழிலிலும் ஆசமனஞ்செய்தே செய்தல் வேண்டுமென்பது பாரத்துவாசர் கருத்தாம். "கைகால் முகம் இவைகளைக் கழுவி கீழ்த்திசையை நோக்கி ஆசமனஞ்செய்து மற்றைக் கிரியைகளை செய்தல் வேண்டும்" என்றுஎடுத்தோதினரென்க. *குக்குடாசனத்திலிருந்தே ஆசமனஞ்செய்தல்வேண்டுமென்று சாண்டில்லியர் விதித்தார். அவர் கூறியது "முழங்கால்களிரண்டின் இடையே கைகளை அடக்கிக் குக்குடம்போலிருந்து தர்ப்பணம் ஆசமனீயம் தந்தசுத்தியாதியுஞ்செய்தல் வேண்டும்." என்பது. சதாசார சந்திரிகையின் முதற்பாகம் முற்றிற்று.

---

## இரண்டாம்பாகம்

முள் நிறைந்ததாவது பால் சுரக்கும் தன்மை பெற்றுளது உள்ள மரங்களின் கொம்புகளைப் பன்னிரண்டங்குல

---

*குக்குடம்—கோழி.

நீளமும்சுண்டுவிரற்பருமனுமுள்ள அளவினதாகக்கொண்டுதந்தசுத்திசெய்தல வேண்டும். அது அத்திமரக்கொம்பாயின் அநுகூலகலவாக்கு உண்டாமென்றும், இச்சிமரக்கொம்பாயின் திரவியம பெருகுமென்றும், வெண்மருதக்கொம்பாயின் ஆரோக்கியமுண்டாமென்றும, ஆலின்கொம்பாயின் அழகுமிகுமென்றும், நாயுருவிக்கொம்பாயிற் சித்திகளுண்டாமென்றும், பிரியங்குக்கொம்பாயின் வசியமுண்டாமென்றும், மூங்கிற்கொம்பாயின் கண்ணொளி வளருமென்றும், கொன்றைக்கொம்பாயின்ஜெய முண்டாமென்றும், மாவிலையாயின் அரசரருள்கிடைக்குமென்றும், பலாக்கொம்பாயினசௌபாக்கியமுண்டாமென்றும்,' நாவற்கொம்பாயின் ஆயுள்விருத்தியாகுமென்றும் சிறுநாவற்கொம்பாயின்கருதிய துகிடைக்குமென்றும், வேலின்கொம்பாயின் வெற்றியுண்டாமென்றும, கோங்கிற்கொம்பாயின் கொடைடபிணி நீங்குமென்றும், பாரந்திகொமபாயின்சௌரியமுண்டாமென்றும்,அசோகின்கொம்பாயிற் சோகநீங்குமென்றும்,இலவங்கொம்பாயின் பிரமதேஜஸ்விளங்குமென றும், கருங்காலிக்கொம்பாயின்காமம்பெருகுமென்றும், வில்வக்கொம்பாயின் ஐஸ்யரிம்விளையுமென்றும், இலந்தைகொம்பாயின் குரல்சுத்திபெறுமெனறும இவ்வாறுஅநேக பலன்கள் பல ரிஷிகளால் எடுத்துககூறப்பட்டுள்ளன. இவைஎல்லாம் ஒவ்வோர் வழியால்சரீராரோககியந்தரத்தக்கனவேயாதலால் இவைகளில் எதையேனும ஒன்றைத்தந்தசுத்திக்குக்கருவியாகக்கொள்ளலாம்.பாரிஜாத மென்னும்கிரந்தத்தில்திருணராஜமென்னும ஓர்வகைக்கொம்பினால்தந்தசுத்திசெய்யலாகாதென்றுசொல்லப்பட்டிருக்கின்றது. திருணராஜம் என்பன-கருப்பு, பனை, ஹிந்தாலம், தாழை, மே

ரால், பேரீச்சு, தென்னை என்பனவாம். அத்திரியென பவாஇங்ஙனம் அபிப்பிராயப்படுகின்றார்:—முகத்திலகா ற்றமிருப்பின் மனிதன் மதி மயங்குமாதலால்தந்தசுத்தி செயதல ஆவசிகமென்றும், தநதசுத்திசெய்யுங்கொம்பு உலர்ந்ததாயாதல பச்சையாயாதல் இருத்தல வேண்டும் என்று .தந்தசுத்திசெய்தலும் காவழித்தலும்சிறியபற்களு டையவனுக்குஒருஅளவும்டுேத்தரமாயுள்ளவனுக்குஇரும டங்கும்பெரியபற்களுடையவனுக்குமும்மடங்கும்உரியன வென்றும்,பல்விளக்குதற்குமுன்னும் பின்னும்வாயைச் சலத்தினுற் சுத்திசெய்தல் வேண்டுமென்றும், புரசு, ப ருத்தி, கீரை முதலியன பலவிளக்குதற்கு உதவாவெ ன்றும் எனக. "தந்தசுத்தி செய்யுங்காலத்தில தென் றிசை மேற்றிசைகளை நோக்கலாகா"தென்பது மார்க ண்டேயர் கருத்து. பிரதமை பௌர்ணிமை சஷ்டி சது ர்தசி அஷ்டமி நவமி சங்கிராந்தி ஞாயிற்றுகிழமைஜன்ம நக்ஷத்திரம் சிராத்ததினம் விவாகதினம் விரததினம் இவைகளில் கொமபினுல் பல் விளக்கலாகாது. தலையில எண்ணெயிட்டுக்கொண்டு ஏதேனும சிற்றுண்டியுட்கொ ள்ளல் தண்ணீர அருந்தல் ஸ்திரிகளுடன் [illegible]லத்தல் வேதாத்தியயனஞ் செய்தல் க்ஷௌரம தாதசுத்தி முத லியன செய்யலாகாது. கொம்புகள் அகப்படாவிடினும் அவற்றால் தந்தசுத்தி செய்யவொண்ணாதமுற்கூறிய காலங்களிலும், சுட்டுவிரலொழிந்த மற்றெவ்விரலினாலே னும் பற்களை விளக்கிப் பன்னிருமுறை சலங்கொண்டு வாய்கொப்பளித்தல்வேண்டும். மற்றோர் ஸ்மிருதியில் ஏகாதசி அமாவாசை யொழித்து.மற்றெக்காலத்திலும் இலைகளால்பல்விளக்கலாம்' எப்பொழுதும்காவல,இச்சிமா இவைகளின் இலைகளால் பல்விளக்குதல் வேண்டும்'.

என்றும், "செங்கற்பொடி மண் கல் இவைகளாலும்சுட்டு விரலாலும் எக்காலத்தும் பல விளக்கலாகாதுஎன்று யாக்ஞவல்கியர் உரைத்தார்.

## பிராதஸ்ஸ்நானவிதி.

---

சௌனகர் "காலையில் ஆசமனஞ்செய்து உடலின் மலம்போக்கிவிதிவழுவாதுபற் றேய்த்தல முதலியவை முடித்துப் பிராதஸ்நானஞ் செய்யத்தொடங்கல் வேண்டு,,மென்றும், மனு "பலம், ரூபம், புகழ்ச்சி, அறம், ஆயுள் அறிவு சுகம் தைரியம் ஆரோக்கியம இவைகளெல்லாம்பிராதஸ்நானத்தின்பயனென்றறிக"என்றும்கூறுவதால், பிராதஸ்நானமாவது இம்மையிலும் மறுமையிலும் பயன் படததக்கதென வெளியாயிற்று. அது கொண்டே தக்கன் கூறுகின்றார் —

"பிராதஸ்நானமாவது இகத்திலும் பரத்திலும் பயனையளிக்கத் தக்கது" என்றுஇனி "ஸ்நானஞ்செய்யாதவொருவன் ஜபம், அக்கினிகாரிய முதலிய கன்மங்களுக்கு அ[illegible]ருக்ஞையால முன் பிராதஸ்நானஞ்செய்தல்வேணடு" மென்று ஸ்மிருதியர்த்தசாரம் எனஇற பெரிய நூல் எடுத்துரைக்கின்றது. "காலையில ஸ்நானஞ் செய்தல எவ்விதத்திலும் தன் மலத்தைப்போக்க முதற்காரண' மாதலால மந்திரங்களையும் தந்திரங்களையுமொருங்கு கூட்டி விதி வழுவாது காலையிலும் மத்தியானத்திலும் ஸ்நானஞ்செய்தல் வேண்டும" என்பது வியாக்கிரபாதர் கூற்று. ஸ்நானமுதலிய எவ்வித வகை காயங்களிலும் மற்றைய எவ்விதப் பிராயச்சித்தங்களிலும் கடவுளினது திருநாமங்களை உச்சரித்துச் சாவ பாபங்களை

யும் விட்டொழித் திடுவானென்று சௌனகர் கூறுகின்றார். இவ்விதமே தக்கன் முதலிய பலரும் ஸ்நானமுதலிய பல கருமங்களிலும் கடவுள் திருநாமத்தைச் செபித்தல் அத்தியாவசியகமென்று கூறுகின்றார்கள். எவ்விதக்கிரியைகள் செய்தபோதிலும் முதலில் சங்கற்பஞ் செய்துகொண்டே செய்யவேண்டும் "சதுர்விம்சதிமதம் என்னும் புத்தகத்தில் "வருணனையும், தீர்த்தத்தின் தேவதைகளையுங்குறிக்கும் மந்திரங்களாலும் பகாவியாக்கிருதிகளாலும் ருக்குவேதமந்திரங்களாலும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும்" என்றிருக்கின்றது. பற்களை விளக்கிய பிறகு நதி ஆறு முதலியவிடங்களில் ஸ்நானஞ் செய்தாலன்றி இவ்விதி உதவாது. வீட்டில் ஸ்நானஞ் செய்பவர்க்கு மந்திர சம்ஸ்காரமயாதுமில்லை" என்றிருப்பதினுட்கருத்து யாதெனில், முக்கியமாய் வீட்டில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு முடியாதுபற்றி எவ்விதமேனும் அவைகளைச் சுருக்கிச் செய்யவேண்டுமென்பதே. ஓடிவருந்தண்ணீரில் அதற்கெதிர்முகமாகவேனும், ஓட்டமற்ற தண்ணீரில் சூரியனை நோக்கியும், இரவில் வடக்கல்லது கீழ்திசையை நோக்கியும் சந்தியாகாலங்களில் காலையில் கீழ்த்திசையை நோக்கியும் மாலையில்மேற்றிசையை நோக்கியும் ஸ்நானஞ் செய்தல்வேண்டும். தேவாலயங்கள் காணப்படின் அஃது எத்திசையிலிருக்கின்றதோ அத்திசையை நோக்கி ஸ்நானஞ்செய்யவேண்டுமென்பது அவ்விடத்திய சிறப்பு.

பின்பு தேவதைகள் ரிஷிகளுக்குத் திருப்திசெய்தல்வேண்டும். கார்ஷ்ணாஜினியென்பவர்க் கொப்புளளவு ஜலத்திலே நின்று மனத்தில் தேவதைகளையும் ரிஷிகளையும் ரிஷிகணங்களையும் காண்ட ரிஷிகளையும் தண்ணீரில் தர்ப்பணஞ் செய்தல்வேண்டும். அத்தர்ப்பணங்

களுக்கு பத்திரங்கள் அவ்விருஷிகள் முதலியோரின் நாமங்களை "பிதுர்க்களையும்பிதுர்க்கணங்களையும்எப்பொழுதும் திருப்திசெய்வித்தல் அவசியம்' என்று சொல்லுகின்றார். 'வடதிசையை நோக்கித் தனது பூணூலைத் தாவடமாய்க்கொண்டு ப்ராஜாபத்யம் என்னும் தீர்த்தத்தினால் ரிஷிகளையும் கீழ்த்திசையை நோக்கித் தனது பூணூலை வலமாகக்கொண்டு தெய்வதீர்த்தத்தால் தேவர்களையும் தென்திசையைநோக்கித் தன் பூணூலை இடமாகக் கொண்டு பிதா தீர்த்தத்தால்பிதுர்க்களையும் திருப்திசெய்வித்தல் வேண்டும். இடதுதோளினின்று தொங்கும் பூணூல் உபவீதமெனப்படும். கழுத்தில்மாலையாகஇருக்கும் பூணூல் நிவீதமெனப்படும். தென்புறத் தோளினின்று தொங்கும் பூணூல் பிராசீனாவீதமெனப்படும். தர்ப்பண காலத்தில் மாலையாகக்கொண்ட பூணூலைக் கைப்பெருவிரலில் சேர்த்துக்கொள்ளல்வேண்டும். இருகைகளின் நடுவினுள்ள ரேகைகளிற் படிந்து விழும் ஜலம் ப்ரம்மதீர்த்தமெனப்படும். சுண்டுவிரலின் நுனியினின்றுவிழும் ஜலம் ப்ராஜாபத்தியம் எனப்படும். நான்குவிரல்களின் நுனியினின்று விழும் ஜலம் தெய்வமெனப்படும். சுட்டுவிரலுக்கும் பெருவிரலுக்கும் இடையினின்று விழும் ஜலம் பித்ர தீர்த்தமெனப்படும். ஆசமனீய காலங்களில் பிரமதீர்த்தம் உபயோகித்தல் வேண்டும். தர்ப்பணத்தின் முடிவில் 'கரையிலேறித்தானணிந்த வஸ்திரத்தை நான்காக மடித்து "யேகேச" என்றுதொடங்கியமந்திரத்தால் பிழிந்து அதனால் பிதுர்திருப்தி செய்தல்வேண்டும். வஸ்திரத்தை மூன்றாய் மடித்துப்பிழியக்கூடாது இவ்வுலகத்தைத் துறந்து சென்ற முன்னோர்கள் நமது வஸ்திரத்தின் நீர் தண்ணீரை அவாவுகின்றார்களாதலால

ல் அதனைக்கையிற் றனே விடுதல்வேண்டும்'' என்று பாரத்துவாசர் சொல்லுகின்றார். பின் ஆசமனீயம் செய்தல்வேண்டும். தமது குடுமியை முன்னிழுத்து அதன் நுனியை முன்புறத்தில் விழும்படி செய்தல் வேண்டும். உடுத்துக்கொண்டு வஸ்திரத்தால் உடம்பைத் துடைத்தல்வேண்டும். தலைமயிர்களை உதறல் கூடாது. உடம்பை உலர்ந்த வஸ்திரம் [illegible] வேண்டும். நதிக்கரைகளிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் வஸ்திரம் [illegible], வஸ்திரத்தைக் கீழ்ப்புறம் [illegible] வேண்டும். [illegible] இவ்விரண்டு வர்ணங்களுக்கு வெண்ணிற வஸ்திரமும், க்ஷத்திரியர்க்கு செந்நிற வஸ்திரமும், வைசியர்களுக்கு மஞ்சள்நிற வஸ்திரமும், சூத்திரர்களுக்குக் கருநிறவஸ்திரமும், [illegible] உரியனவாம். எல்லோருக்கும் அழுக்குள்ளதும் கிழிந்ததுமான வஸ்திரங்கள் ஆகாவாம். [illegible] வஸ்திரத்துடன் மலஜலபரிக்காலம் உடம்பை முறைமுறை பிராணாயாமம் செய்து [illegible] வேண்டும். வஸ்திரம் [illegible] [illegible] களைத் [illegible] வஸ்திரங்களில் [illegible] [illegible] உதவாது.

நாமே தோய்த்த வஸ்திரத்தைத் தரித்தே நற்கிரியைகளை நடத்தல்வேண்டும். வண்ணானால் தோய்த்ததும் தோய்க்காத புதியதும் காரியங்களில் தரிக்கக் கூடாது. முற்கூறிய குறையற்ற வஸ்திரங்களே எல்லாக் காரியங்களிலும் உரியதெனக் கொள்ளற்பாலது. கச்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR … MADRAS

சையிடாதவன், நூலைக்கச்சமாத் தரிப்பவன், குறுக்கேக்
கச்சமிடுபவன், மேலிழுத்துக் கட்டுபவன், அரைஞாணிற்
கச்சமிட்டவன், உத்தரீயமில்லாதவன், இவர்கள் வஸ்திர
மில்லாதவர்களுக் கொப்பா வராதலால வைதிக கருமங்
களிலேனும் மற்றைக் கருமங்களிலேனும் அநதிகாரிகளே
யாவர். மேலும் அழுக்குடை பூண்டவன் ஈரவுடைத
ரித்தவன் எரிந்தவுடை பூண்டவன் உடையில்லாதவன்
இவர்களும் நக்கினர் (உடையில்லாதவர்க் கொப்பான
வர்) எனப்படுவார்கள். வஸ்திரந்தரிக்கும் வேளையில
உத்தரீயத்தைத் தலையிற் சுற்றிக்கொள்ளுதல் வேண்டும.

உடையைத் தரித்துக் கால்களைக் கழுவி ஆசமனஞ்
செய்யவேண்டும. "நதியிருக்குமிடத்து மற்றைய நீர்க
ளில ஸ்நானஞ் செய்யலாகாது. நீர் நிறைந்தவிடமிருக்
கக், குறைந்த சலத்தில குளிக்கலாகாது. சண்டாளர்கள்
தொட்டகிணறு குளங்களில ஸ்நானஞ்செய்தல்கூடாது.
என்று சந்திரிகை என்னுங் கிரந்தம கூறுகின்றது. சா
ண்டில்லியரென்பவர் "சூத்திரர்கள், ஸ்திரீகள், நாஸ்திகர்,
பாஷண்டர், குழந்தைகள், வியாதியாளர் இவர்களுடன்
சேர்ந்து ஸ்நானஞ் செய்தல கூடாது" என்று சொல்லு
கின்றார். ரோகிகளாயுள்ளவர்கள் வெந்நீரிலே ஸ்நான
ஞ்செய்தல வேண்டும. ஸ்மிருத்தியர்த்தசாரம் "நித்திய
கன்மங்களுக்கென ஒவ்வோர் தினமும ஸ்நானஞ்செய்
தல் வேண்டும். சலத்தில் ஸ்நானஞ் செய்யச் சக்தியில்
லாதவன் மிர்த்திகையால் அல்லது வெந்நீரால ஸ்நான
ஞ்செய்தல வேண்டும்" என்று கூறுகின்றது. "சுத்தமா
யினும அசுத்தமாயினும் தேவாலயங்களில அருகிலுள்ள
தீர்த்தம் கங்கைக்குச் சமானமாதலால் அது அனேகபா

வங்களை ஒழிக்கும்'' என்று கௌதமர் சொல்லுகின்றார். ஸ்நானஞ்செய்யச் சக்தியல்லாதவன் இடுப்பளவிலேனும் ஸ்நானஞ் செய்தலாவது அல்லது ஈரவஸ்திரத்தால் உடம்பைத் துடைத்துக் கொள்ளலாவது வேண்டும். வேதங்களிற் சொல்லிய மந்திரங்களால் தண்ணீரைப் புரோக்ஷித்துங் கொள்ளலாம். அல்லது கடவுளை ஒருவாறு தியானிக்கலாம். ஆதலாற்றான் ஸ்மிருதி ரத்தினத்தில் "நான்கு கையுடையவனும் மஹாதேவனும் சங்கு சக்கர கெதைகளைத் தரித்தவனுமான விஷ்ணுவைத் தியானஞ் செய்தல மானஸ ஸ்நானம் ஆகும்'' என்று கூறப்பட்டுள்ளது. "கடவுளை நினைத்தலே மானஸ ஸ்நானம்'' என்றும் "ஸ்நானங்களுள் மானஸ ஸ்நானமே சிலாக்கியமெனப் பெரியோர் கூறுவார்'' என்றும் யாக்ஞவல்கியர் எடுத்தோதினார். சண்டாளர் முதலாயினோரைத் தீண்டினும உடனே ஸ்நானஞ் செய்தல வேண்டும. தீண்டினவரை மற்றொருவர் தீண்டில் அது புத்திபூர்வமானால் ஸ்நானஞ்செய்ய வேண்டும. அதுவுமில்லாத விடத்து ஆசமனஞ் செய்வதும போதியதாம். நான்காவது மனிதனுக்கு ஆசமனமே யன்றி ஸ்நானமில்லை. சாதிப்பிரஷ்டர்களுக்கு ஓர் நுகத்தடியளவும் மாதவிடாயுள்ள மாதர்களுக்கு இரண்டு நுகத்தடியளவும் பிரசவித்த ஸ்திரீகளுக்கு மூன்று நுகத்தடியளவும் சண்டாளருக்கு நான்கு நுகத்தடியளவும ஒதுங்கிச் செல்லவேண்டும். இவற்றிற்குட்படின் உடனே ஸ்நானஞ் செய்தல்வேண்டும். நுகமென்பது இரதத்தின் நுகம் ஒன்பது அடியும் வண்டியின் நுகம் எட்டடியுமென அளக்கப்படும். சமவர்த்தமாமுனிவர் கூறுவதாவது "சங்கடத்திலும் மேடுபள்ளங்களிலுமகுறுகிய வழிகளிலும் பெரும்பட்டணங்களிலு

ள்ள மார்க்கங்களிலும் முற்சொன்ன விதிகளைச் சிறிது விலக்கிக் கொள்ளலாம்" என்பது. புற்களால் செய்யப்பட்ட ஒர் ஆசனத்தில் தாம் தீண்டவொண்ணு நிலைமையுள்ள மற்றொருவருடன் இருக்கலாகாது. சண்டாளான் முதலிய மற்றையோரை அசுசியாயுள்ள காலத்துத் தீண்டின், தீண்டினவன் மட்டில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். எக்கருமம் செய்யுங்காலத்தும் போசனகாலத்தும் பூனையின் வாலைத் தொட்டால் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். "பூனை, ஈ, எறும்பு, புழுக்கள், வெட்டுக்கிளி, தவளை, இவை முதலியன எல்லா வஸ்துக்களிலும் சம்பந்தப்படுவனவாதலால், இவைகள் தொட்ட வஸ்து எச்சிலாகாது" என்று மனு எடுத்துரைத்தார். இரவில் ஸ்நானஞ்செய்தல் ஜலம் உட்கொள்ளல் இவை யெல்லாம் தீபத்தின் முன்புதானே செய்தல் வேண்டும். இரவில் தொடக் கூடாத ஒன்றைத் தொட்டால் வெந்நீரில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். சுபாகன் சண்டாளன் இவர்களின் நிழல்பட்டபோதும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். நாற்பது அடிக்கு மேற்பட்ட நிழல் பட்டால் ஸ்நானஞ் செய்ய வேண்டுவதில்லை. பிணியாளர் ஸ்நானஞ் செய்ய நேரின் அவர்களைப் பன்னிருமுறை பிறரொருவர் தொட்டுத் தொட்டு ஸ்நானஞ் செய்யின் அவர்க்கு அதனால் சுத்தியுண்டாம். ஸ்நானஞ் செய்பவர் தம்மைத்தொடும் ஒவ்வொரு முறையிலும் அப்பிணியாளி சுத்தவஸ்திரந் தரித்தல் வேண்டும். ஆலயங்களில் மகோற்சவங்களை நிறைவேற்றியும் திருமணச் சபைக்குச் சென்றும் பந்துக்களை வணங்கியும் ஸ்நானஞ் செய்யலாகாது. தமக்கு மக்கள் பிறந்த காலத்தும் கிரகண காலத்தும் இராக்காலமாயினும் ஸ்நானஞ் செய்யவேண்டும். பகலில் ஸ்நானஞ்

செய்யாதவன் இரவில் வெந்நீரில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். கண்ணோய் முதலிய சில ரோகங்கள் ஒருவனைப் பார்த்த காலத்தும் தொட்ட காலத்தும் ஒட்டிக் கொள்வது போல சுத்தி அசுத்திகளும் ஒருவர் சரீரத்தினின்று மற்றொருவர் சரீரத்துக்கு வரும். சண்டாளர் முதலாயினோரும் மனிதர் தாமே, அவர் மட்டும் அசுத்தியுள்ள வராதல் எப்படியாமெனில், சண்டாளருக்குப் பிறப்பாலும் குடித்தல் முதலிய அசுசிகளாலும் அவர்கள் அத்தன்மைய ராகின்றார். பெண்களுக்கோ, மாதவிடாய் முதலிய அசுசிகளால் சிலகாலங்களில் அசுத்தியுண்டாகின்றது. இனி ஸ்நானஞ் செய்யச் சக்தியற்றவர்களுக்கு அநுகற்பம் யாக்ஞவல்கியர் கூறுவதாவது:— "தண்ணீரில் ஸ்நானஞ்செய்தல், புரோக்ஷித்தல், சலத்தைத் தொட்டு மந்திரித்தல் தண்ணீரை நோக்கி அகமருஷண மந்திரத்தை மும்முறை செபித்தல், இவையெல்லாம் பெரியோர் ஸ்நானமென்று சொல்வார்கள் என்று. சலமத்தியில் சுத்தனாய் விஷ்ணு காயத்திரியை உச்சரித்தல் வேண்டும். வியாகிருதியோடு கூடிய மகா காயத்திரியை உச்சரித்தல் வேண்டும். நாராயணனைத் தியானித்தல் வேண்டும். பாவங்கள் விட்டொழியும்' என்று. கிரகணகாலத்து ஸ்நானஞ் செய்தல் ஆவசியகமே. வியாதியுடைய வனேனும் அக்காலத்து வெந்நீரால் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். "கிரகணகாலத்தில் தண்ணீரெல்லாம் கங்கைக்குச் சமானம்; பிராமணரெல்லாம் பிரமதேவருக்குச் சமானம்; தானமெல்லாம் பூதானத்துக்குச் சமானம்" என்று வியாசாசாரியர் சொல்லுகின்றார். கிரகணகாலத்தில் ஸ்நானஞ் செய்யாதவனுக்கு ஏழு ஜென்மம் வரையில் ரோயுண்டாமென்

றும், ஆதலால் அக்காலத்து ஸ்நானஞ் செய்தல் யாவா க்கும் அத்தியாவசியகமென்றும் பெரியோர் கருத்து. "மாக மாசத்தில விடியற்காலத்தில் ஸ்நானஞ்செய்தவன் பரலோகத்தைப பெறுவான்" என்றிருத்தலால் மாக மாசத்து விடியற்காலத்தில செய்யும ஸ்நானம் அனேக பாவங்களைத் தொலைக்கும. சோமவாரம் சனிவாரம் புதவாரங்களில எண்ணெயிட்டுக் கொள்ளலவேண்டும். சங்கிர மணம யதீபாதம் ஜென்மநக்ஷத்திரம் ஏகாதசி சதுர்த்தசி அஷ்டமி பிரதமை சஷ்டி பாவகாலங்கள் இக்காலங்களில எண்ணெயிட்டுக் கொள்ளலாகாது. குழ நதைகளுக்கும் ரோகிகளுக்கும விருத்தாகளுக்கும் இம முறை ஆவசியகமில்லை. காலையில எணணெயிட்டுக் கொள்வது குற்றத்திற்கிடமாம். நரகச் சதுர்த்தசி தின த்தில சூரியன் உதிப்பதன முன ஸ்நானஞ் செய்தல்வே ண்டும். ஸ்மிருதியர்த்தசார மென்னும புத்தகத்தில "சதுர்த்தசியன்று இரவில நரகாசுரனை யொழித்தாரா தலால் அன்றைய உதயத்தில் நரகஅபயமுள்ள ஒவ்வொ ருவரும அப்பியங்க ஸ்நானஞ் செய்தலவேணடும். தயி லத்தில் இலக்ஷ்மியும் சலத்தில் கங்கையும் அத்தீபா பலி தினத்தில வசிக்கின்றாகள்" என்று சொலலப பட் டிருக்கின்றது.

கலப்பற்ற நல்லெண்ணெ ஒன்றுமட்டில் ஞாயிறு முதலிய வாரங்களில தேய்த்துக் கொள்ளலாகாது. பிர சேதஸ்என்பவர்" கடுகெண்ணெ வாசனை வஸ்துக்கள் கலந்த எண்ணெ, புட்பங்கள் சேர்ந்த எண்ணெ, மருந் தெண்ணெ இவைகட்கு எக்கால்த்தும குற்றமில்லை" என்கின்றா. மற்றோரிடத்தில் "ஞாயிற்றுக்கிழமையில

வெப்பத்தையும் வியாழக்கிழமையில் புல்லையும் வெள்ளிக்கிழமையில் கோமயத்தையும் செவ்வாயில் மண்ணையும் கலந்து தைலமிட்டுக்கொள்ளல்வேண்டும். பிணிதீர்க்குமெண்ணெய்க்குக் கிரகணகாலமொழிந்த மற்றகாலங்கள் தோஷமற்றனவாம்" என்று காணப்படுகின்றது. இன்னும் "வெள்ளிக்கிழமை பின்பகலில் பொருள் விருப்புள்ளவன் எண்ணெயிட்டுக் கொள்ளலாம்" என்று காலாமிர்தம் எடுத்தோதுகின்றது. அதே புத்தகத்தில் "யாத்திரை செல்லும் தினத்திலும் மரணாசௌச காலத்தும் எண்ணெயிடுதல் கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தலால் அனேக பாவங்கள் ஒழியும், சுத்தமன முடையோன அத்தீர்த்தப் பயனைப் பெறுவான். மாபாரதம் அஸ்வமேத பாவத்தில் "எவருள்ளத்தின்கண் பரமான்மா குடிகொள்வனோ அதுவே பரப்ரமமவஸ்து, அதுவே பரமபுண்ணியம், அதுவே தவத்திற்குரியவிடம்" என்றும் "இல்லறவாழ்வை முற்றும் துறவாதவனுக்குப் புண்ணிய தீர்த்தங்கள் பெரும் பயனை விளைவிக்கா' வென்றும் இருத்தலாலெண்க. இனிப் புண்டரங்களைப் பற்றிச் சிறிது கூறுவாம். புண்டரமென்பது நாம் வழிபடும் கடவுளிடம் நமக்குள்ள பெரும்பற்றைக் குறிக்கும் ஓர் குறி. இது வெகுகாலமாய் நமது தேசத்தில் உள்ளது. கோசங்களிலும் பட்டைகளுள்ள கரும்புக்குப் புண்டரமெனப் பெயருண்டு. அப்புண்டரம் முகத்திற்கு அலங்காரமாதலால் அஃதில்லாதது பெரியோர் வெறுக்கத் தக்கதே. அது பிரதானமாய் ஊர்த்துவ புண்டரமென்றும் திரிபுண்டரமென்றும் இருவகைப்படும். ஊர்த்துவபுண்டரம் அரியை வழிபடுவோர்க்கும் திரிபுண்டரம் அரனை வழி

படுவோர்க்கும் உரியது. இவ்விரண்டினுள் ஒன்று அவசியம் தரிக்கற்பாலது. பத்ததிகாரர் "ஊர்த்துவபுண்டரம் அல்லது திருபுண்டரத்தைத் தினம் ஒருவன் தரிக்கவேண்டும்" என்று சொல்லுகின்றார். விஷ்ணுஸ்மிருதியில் "எக்ஞோபவீதம், சிகை, ஊர்த்துவபுண்டரம், பவித்திரம் இவை இல்லாதவன் செய்யுங் கர்மங்களெல்லாம் பயனற்றவையெனவும் "அசுசியும், அநாசாரமும், மன அழுக்கும் நிறைந்தவனாயிருப்பினும் ஊர்த்துவ புண்டரத்தைத் தரிப்பதால் அவன் சுசியாவன்" என்றும் இருக்கின்றது.

மற்றோர் ஸ்மிருதியில் "நீர்" திருநீறு, திருமண், சந்தனம் இவைகளால் ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்கவேண்டு" மென்றும் "ஜபகாலத்தில் திருமண்ணும், சந்தியாகாலத்தில் தண்ணீரும், ஓமகாலத்தில் திருநீறும், சந்தனம் எக்காலத்தும் தரிக்கத்தக்கன" என்றும் இருக்கின்றது. இங்கு சந்தியாகாலத்தில் தண்ணீரைத் தரிக்கவேண்டுமென்றது திருமண்ணில்லா விடத்தென்றறிக. "ஸ்நானம் செய்தவுடன் திருமண் தரித்தல் வேண்டும். ஓமம் செய்தவுடன் திருநீறிடல் வேண்டும் தேவதைகளை வணங்கியவுடன் சந்தனத்தைத் தரித்தல் வேண்டும்" என்றிருத்தலாலென்க. வெண்ணிற மண்ணால் ஊர்த்துவபுண்டர மிடல் மோக்ஷத்தைக்குறித்தது. ஆதலாற்றான் ";மஞ்சள் நிறமுள்ளது ஐஸ்வரியத்தையும் வெண்ணிறமுள்ளது விஷ்ணு பிரீதியையும் தரும்" எனவோரிடத்தும், மற்றோரிடத்து செந்நிறமுள்ளது வசீகரத்தையும் மஞ்சள் நிறமுள்ளது ஐஸ்வரியத்தையும் வெண்ணிறமுள்ளது மோக்ஷத்தையும்

கொடுக்கும் என்று சொல்லுகின்றது. "அரியுடைய திருவடிகளைப் போல நடுவில வெளியுடன் ஆன்மா நற்கதிபெறற் பொருட்டு ஊர்த்துவபுண்டரந் தரித்தல வேண்டும்" என்று அதர்வண சுருதியிலிருப்பதாலும், "நெற்றியில் ஊர்த்துவ புண்டரத்தைத தண்டம்போல் இடைவெளியுடன கேசவன் முதலிய சொற்களோடு நமவென்பதைச சேர்த்து உச்சரித்துக் கொண்டு வைஷ்ணவன் தரிப்பானாக" என்று வசிஷ்டர் கூறுவதாலும் வெளியுடனே ஊர்த்துவபுண்டரந்தரித்தல் வேண்டுமெனப் புலப்படுகின்றது. மேலும் 'ஊர்த்துவபுண்டரத்தின் நடுவில பெரிய பிராட்டியாருடன் கண்ணன் எழுந்தருளியிருப்பார்" என்னும் பாத்மபுராண வசனத்தாலும், லகுவார கோபமிட்டத்தில் நடுவில ஸ்ரீசூரணம தரித்தலே விதித்தலாலும வெளியுள்ள ஊர்த்துவபுண்டரம் வெண்ணிற மண்ணைக்கொண்டு தரித்தல வேண்டுமென்று புலப்படுகின்றது. கோபிசந்தனங் கொண்டு ஊர்த்துவபுண்டரந்தரிக்கும விதி வாசுதேவோபநிடதத்தில் "கோபிசந்தனத்தை வணங்கி எடுத்து" என்று தொடங்கி "வைதிகர்களான பிராமணர் எல்லோரும கோபிசந்தனம் தண்ணீர் இவ்விரண்டைக் கொண்டு ஊர்த்துவபுண்டரந் தரிக்கத் தக்கது" என்பது வரையில் விரிவாய் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இனித் திருபுண்டரத்தைக் குறித்துச் சொல்வாம். பாரதுவாஜர் "அக்கினிஹோத்திரத்தினின்றும் எடுத்த வெண்ணிற விபூதியை ஈசானமந்திரத்தால் தலையில் தரித்தல வேண்டும்" என்றார். மற்றொரிடத்து "தாம செய்யும் கருமம் பலப்படும் பொருட்டு அக்கினிஹோத்திரத்தில உதித்த திருநீற்றையே மூன்வருணத்தவர் மூவரும் தரித்தலவேண்டும்" என்றிருக்கிறது.

ஆதலால், வைதிகர் மூவரும் அக்கினிஹோத்திர ஔபா சனங்களிற் றோன்றிய திருநீற்றையே தரித்தல் வேண்டு மென்றும மற்றைய திருநீறு யற்றவர்க்கெனவும் ஏற்பட் டது. சந்தியாவந்தன காலத்தில ஊர்த்துவபுண்டரமும் பிறகு திருநீறணிதலும் வேண்டுமென்பது சிலர் கருத்து. அங்ஙனமே சமுச்சயமென்னும் புத்தகத்தில அநுட்டா னகாலத்தில் முன்பு திருமண்ணைத் தரித்துப்பின்பு அக் கினிஹோத்திரத்திலுண்டான விபூதியைத் தரிக்கவேண் டுமென்றிருக்கின்றது. சில விடதது அக்கினிஹோத்திர ஔபாசன விபூதியைக் கொண்டு ஊர்த்துவபுண்டரந்தரி த்தல்வேண்டு மென்று சொலலப்பட்டிருகின்றது. இதற் கோர் பிரமாணம "மீ" கிலம், திருநீறு, சநதனம் இவ ற்றால ஊாத்துவபுண்டரந தரிததலவேண்டும் என்று மு ன்னமே எடுத்தோதினோமலலவா. அவ்விதமே வைகா நசசூத்திரத்திலும் சமிதாதானஞ்செய்த பிறகு "பூதி" எ னததொடங்கிய மநதிரத்தால் விபூதியை எடுத்து ஆதி த்த" என்னுந் தொடக்கத்து மநதிரத்தை உச்சரிதது நெற்றி, மார்பு, தோள், கண்டம இவைகளில ஊாத்து வபுண்டரமாகத்தரித்தல வேண்டுமெனச் சொலலப்பட் டிருக்கினறது. இங்ஙனமிருக்க வாமன புராணம முத லியவிடதது "திருநீற்றைககொண்டு ஊாததுவ புண்டர மும் திருமண்ணைக கொண்டு திரிபுண்டரமும தரித்தால் பிரமஹத்திக்குச் சமானமென்பது வேதத்தைக் கற்றுண ர்ந்த முனிவர் கருத்து" என்றிருப்பது யாது பற்றியோ வெனின், அஃது அவைதிகமான திருநீற்றை பற்றியே யென்றறிக தொழிக. இனி முடிந்தது முடித்தல் யா தெனில் அவரவர் குலாசாரம் வழுவாது புண்டரங்களை த்தரித்தல் வேண்டுமென்பதே.

ஆதலாற்றான் சித்தமுள்ளவன் புண்ணியகாலத்தில் திருமண்ணெடுத்து ஊர்த்துவபுண்டரத்தை யாதல அல்லது திருநீற்றைக்கொண்டு திரிபுண்டரத்தையாதல தரித்தல் வேண்டுமென்று தர்மசாத்திரங் கூறுகின்றது. மாதவாசாரியரும தத்தங் குலாசாரப்படி திருநீறு திருமண்களைத் தரித்தல்வேண்டுமென்றார். இனிச் சிலவிடத்து ஊர்த்துவபுண்டரத்தையும் சிலவிடத்துத் திரிபுண்டரத்தையும குற்றங்கூறி நிற்றல எக்காரணத்தா லெனின், அதன கருத்து ஓரிடத்திற் பற்றுண்டாகவேண்டுமெனபதேயன்றி மற்றொன்றை விடவேண்டு மென்றல்ல. ஓர் சமயம இவ்விரண்டினுள் ஒன்றிற்கொண்டு மேம்பாடடைந்தாயினும அவ்விரண்டையும விட்டொழிதல புத்திமான்களுக்கு அழகல்ல. குலாசாரப்படி தரித்தலே முறையாம். உலகத்து ஓரிடத்துக் கிணற்று நீரும ஓரிடத்து ஆற்றுநீருமுண்ணுமுள்ளதெனச் சொன்னால அவ்வவ்விடத்து அவ்வந்நீர்களைஉட் கொள்ளல் உசிதமேயன்றி இரண்டையும் விட்டொழிந்துநிற்றலுசிதமாகாதென்பதை அறிவுடையோர தாமே அறிந்துகொள்வார்கள். இனி நமது சாத்திரங்களில் ஓரிடம் கண்ணுதற்பெருமானையும் மற்றோரிடத்துக் காரவண்ணக் கண்ணனையும பரமாக கூறுதல் குற்றமெனச்சிலர் பிதற்றினும் அது உண்மையை அறிந்த எமபோலவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குமாகலால அதைப்பற்றி எழுதுவதை இங்கு விரிவஞ்சி விடுத்தோம. இவற்றுள புண்டரதரித்தல் வேதாகம புராண தாயசாத்திராதிகளில சொலலபபட்டனவே யாதலால் அது எல்லோரும் கொள்ளற்பாலதென ஏற்பட்டது. அது கடவுளின் திருவருளை எமபிடம் பெருக்குமாகலானும் நமக்கிஃது ஓர்பேரணி

யாதலாலும் இருமைப்பயனுள்ளது. உலகத்தார் உய்யுமபொருட்டல்லவோ மாதேவனு மாபுருடன் இருவரும் முறைமையே திருநீற்றையுந் திருமண்ணையும் அணிந்தார்கள். அவரணிந்ததற்குப் பிரமாணம் அவரவரைப்பற்றிச்சொல்லுமிடத்தே அறிந்து தெளிக.

இனிச் சந்தியோபாசனத்தைப் பற்றிக் கூறுவாம். மூன் வருணத்தவர் மூவருக்கும் பற்பல கன்மங்கள் விதிக்கப்பட்டிருப்பினும் அவற்றுள் சந்தியாவந்தனமென்னுங் கருமமே சிறப்புற்றது. "காலையில் நக்ஷத்திரங்கள் நன்றாகத் தோன்றும்பொழுதே விதிவழுவாது சந்தியாவந்தனஞ் செயல்வேண்டும் சூரியனுடலம்பாதி மறைந்திருக்கும் பொழுது மாலையில் சந்தியாவந்தனஞ் செய்தல்வேண்டும்" என்று சம்வர்த்தர் மொழிகின்றார். "காலையிற் செய்யும் சந்தியாவந்தனமாவது நக்ஷத்திரங்கள் புலப்படுங்கால் செய்யின் உத்தமமென்றும், அவை சிறிது மறைந்திருக்குங்கால் செய்தால் மத்திமமென்றும், சூரியனைக் கண்டபிறகு செய்தால் அதமமென்றும் ஆக மூவகைப்படும். மாலையிற்சந்தியாவந்தனம் சூரியன் புலப்படுங்கால் உத்தமமென்றும், சிற்சில நக்ஷத்திரங்கள் தோன்றுங்கால் மத்திமமென்றும், நக்ஷத்திரங்கள் முற்றிலும் வெளிப்படுங்கால் அதமமென்றும், ஆக மூவகைப்படு"மென்றும் வியாசாசாரியர் சாற்றுகின்றார். உதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகள் சந்தியாவந்தனத்திற்கு முக்கியகாலம். உதயத்திற்குப்பின் மூக்கால நாழிகைவரையில் மத்தியகாலம். அதுகொண்டே ஸ்மிருதியில் 'உதயத்திற்குமுன் இரண்டு நாழிகைகளும் பின் மூன்றேமுக்கால் நாழிகைகளும் சந்தியாவந்தனத்திற்குக்கால'மென்று இருக்கின்றது. முக்கியகாலத்திற்குள் சந்தியை அநுட்டித்தல் வேண்டும். ஜலமுதலியவை கிடைக்காவிடத்தில்

அமுக்கியகாலத்திலுஞ் செய்யலாம். அவ்விதஞ் செய்யாதவர் பெரும்பாபத்திற்குள்ளாகி ஆந்தையாகப்பிறப்பர். காலையிற் செய்யும் சந்தியாவந்தனத்தால் இரவிற் செய்த பாபமும், மாலையிற்செய்த சந்தியாவந்தனத்தால் பகலிற்செய்த பாபங்களுமொழியும். 'மந்தேகா' என்னும் ஓர்வகை இராக்ஷதர்கள் சூரியனை எதிர்ப்பார்களென்றும் அவர்கள் அந்தணர்களளிக்கும் அர்க்கியத்தால் ஒழிவார்களென்றும் வேதங்கூறுகின்றது. இவ்விதமறிந்து சந்தியாவந்தனத்தைச் செய்பவர் நீடூழி வாழ்ந்து பாபத்தையொழித்துப் பரகதி அடைவர். யாக்ஞவல்கியர் தாம் எழுதிய யோகலீலையில் 'முற்கூறியபடி உண்மையையறிந்து சந்தியாவந்தனத்தைச்செய்பவர் நீண்ட ஆயுளைப் பெற்றுப் பாபங்களையொழிப்பார். ஆசௌசகாலத்திலும் மந்திரங்களை மனதில் தியானித்துச் சந்தியாவந்தனத்தை முடிக்கவேண்டும். முக்கியகாலத்திற் செய்யாமல் அதற்குமுன் செய்திருந்தால் மீண்டும் தக்க காலத்தில் செய்யவேண்டும். அக்காலத்தில் செய்வதும் செய்யப்படாததும் ஒன்றே. முக்கியகாலத்திற் செய்யத் தவறினால் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று சங்கிரகக்காரர் கூறுகின்றார். 'ஆசமனீயஞ்செய்து விதிவழுவாது பிராணனையடக்கி நான்காவது அர்க்கியத்தைக்கொடுத்தால் அதனால் அக்காலங்கடந்து செய்ததுநீங்கும்' என்றும் சம்வர்த்தர் என்பவர் 'அர்க்கியப் பிரதானகாலந் தவறினால் எண்ணூறு காயத்திரி ஜபஞ்செய்தல்வேண்டுமென்றும் சாற்றுகின்றார்.

கௌணகாலமுங் கடந்தால் எண்ணாயிரம் காயத்திரி ஜபஞ்செய்தலவேண்டும். இடங்கள் மாறுதலால் பலனும் வேற்றுமைப்படுமென வியாசர் கூறுகின்றார். 'வீட்

டில் ஒருமடங்கும், கோஷ்டிகளில் பதின்மடங்கும் நதி
க்கரையில் நூறாயிரமடங்கும். கடவுள் சந்நிதியில் அள
விலாப்பயனைத் தருவதுமாகும்' என்று

---

## சந்தியாவந்தனஞ் செய்யும் முறை

---

ஆசமனீயஞ்செய்த பிறகு "ஆபோ" என்றுதொட ங்கியமந்திரத்தில் ஒவ்வோரடியின் இறுதியில் ஒவ்வொரு முறையாகவாறு ஒன்பதுமுறை ப்ரோக்ஷணஞ்செய்துகொள்ளல்வேண்டும். அம்முறையைக் குறைக்கவுமிகுதியாக்கவுங்கூடாது. ஒவ்வோரடியிலும் ப்ரணவத்துடன்சேர்த்துப்ப்ரோக்ஷணஞ்செய்யின் அதனால் ஒருவருடத்திற்குள் செய்த பாபம் நீங்குமெனச் சௌனகர் சொல்லுகின்றார். தண்ணீரை ஒழுகவிடாது ப்ரோக்ஷணஞ் செய்தல்வேண்டும். அங்கனஞ்செய்யும் ஒவ்வொரு துளிகளும் நிலத்தில் விழாது சிரசிற்குமேல் தங்கும்படி செய்துகொள்ளல்வேண்டும். பிறகு 'சூர்ய, ஆப, அக்னி' என்று தொடங்கும மந்திரங்களால் முறையே காலை, பகல், மாலைகளில், மந்திரித்த தண்ணீரை உட்கொள்ளல்வேண்டும். உடனே 'ததி' என்று தொடங்கும மந்திரங்களால் (ஒவ்வொரு அடியின் இறுதியில் வ்யாஹ்ருதி உச்சரித்து) பதின்மூன்று முறை ப்ரோக்ஷணஞ் செய்துகொள்ளல்வேண்டும். உடனே இருகைகளால் தண்ணீரெடுத்துக் காலையிலும் பகலிலும் எழுந்தும், மாலையில் உட்கார்ந்தும் காயத்ரி மகாமந்திரத்தால் மந்திரித்துச் சூரியனை நோக்கி அர்க்கியத்தைக்கொடுக்கவேண்டும். "ஸ்ம்ருதி சங்கிரகத்தில் தண்ணீருள்ளவிடத்திற்சென்று பூர பாட்டின் கொப்பளவு உயரத்

திறந்துத் தண்ணீர்விட்டுமே ஆசமனம் விடவேண்டும்', எ
ன்றிருக்கின்றது. சுட்டுவிரலும் பெருவிரலுமொன்றுட
னொன்று சேராமலிருக்கவேண்டும் சேர்ந்தால் அம்மந்த
இராக்ஷசி முத்திரை என்பார்கள். பின்பும் பிரணவத்தை
யும் வியாகிருதிகளையும் உச்சரித்துப் பிரதக்ஷணஞ் செ
ய்தலவேண்டும். இதனால் யக்ஷர்கள் என்பவர்களுக்குச்
செய்த தீங்கினால் உண்டான கெடுதி ஒழியுமென்று வே
தஞ்சொல்லுகின்றது. உடனே ஆசமனஞ்செய்தலவேண்டும்'
'யாக்ஞவல்க்யர்' என்னும் முனிவர் 'வெளிப்புலன்களை
யடக்கி உட்புலன்களை யொடுக்கி உள்ளத்திற்செலுத்திய
ஸ்படிகமணிபோன்ற நிர்மலமாய தமது புத்தியில் பிரதி
பிம்பித்த ஆத்தும சுவரூபத்தை உபாதியை விட்டக
ற்றிய சச்சிதானந்தப் பிரமமயமாக நின்று அதுவேதா
னாய் வேற்றுமையற்றுச் சிறிதுகாலம் தியானிக்கவேண்டும்
என்று சொல்லுகின்றார். சந்தியாகாலத்தில் தண்ணீ
ரைக் கைவிரல் தனக்கெதிரில் புஷ்பத்தையாவது
எடுத்து மூன்று அர்க்கியங்கள்கொடுத்தலவேண்டும். அது
வும்கிட்டாவிடத்துச் சூரியனைத் தியானித்தல் வேண்டும்.
பிறகு சூரியாதி நவக்கிரகங்களையும் கேசவாதிகளையும்
உத்தேசித்துத் தர்ப்பணஞ் செய்தலவேண்டும். சந்தியா
வந்தனத்தில் அர்க்கியம் கொடுத்தலே மிகச்சிலாக்கியம்.
பிராணாயாம முதலிய மற்றவை எல்லாம் சுத்திக்குக்கார
ணமான அங்கங்கள். தண்ணீரைக் கையிலெடுத்து அத்
துடன் பிரதக்ஷணஞ் செய்தலும் பிராணாயாமஞ் செய்
தலும் குற்றத்தை யகற்றிக்கொள்ளும்பொருட்டே. பிற
கு 'இவாதித்தன் பிரமம்' என்னும் மந்திரத்தை உச்சரித்
துத் தன்னைச்சுற்றிப் பிரதக்ஷணஞ் செய்தலும், பாபம் வி
லகும்பொருட்டும் அஸ்திரம் இருமுறையும், உடனே ஆ

சம்னீபஞ்செய்து ஜபஞ்செய்யும்இடத்திற்கேகவேண்டும். 'சங்கர' என்பவர்ஜபத்திற்கு வேண்டியவிடங்களைப்பற்றிக்கூறியிருக்கின்றார். 'வீட்டில் ஒருபங்கும் நதிக்கரையில் இருபங்கும் பசுக்கொட்டடவிடத்தில் பத்துபங்கும், அக்கினிகிரகங்களில் நூறுபங்கும், உத்தமக்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும், தேவதாசந்நிதிகளிலும் ஆயிரம்பங்கும், ஈசுவர சந்நிதியில் அனந்தமாய் அம்மந்திரங்கள் பயன்படுமென்' றென்பர். அவரது திருவாக்கு ஜபஞ்செய்தல் எப்பொழுதும் அடக்கமாக யிருக்கவேண்டு மென்பது அதுவே அதிகப்பயன்பாடுள்ளதெனப்பெரியோர்கருத்து. தர்ப்பை, கிருஷ்ணாஜினம், வஸ்திரம் இவற்றால் முறையே செய்துகொள்ளல்வேண்டும். பவித்திரம் அகப்படாவிடில் பூணூலைப் பவித்திரவிரலில் தரிக்கவேண்டுமென்பது வைகானசர் கருத்து. 'பிரமலோகமவரையில்' என்றற்றொடக்கத்தின் மந்திரத்தால் தேவதைகளையும் அந்தணர்களையும் நமஸ்கரித்தல் வேண்டும். "பூதங்களொழிக" என்னும் மந்திரத்தால் பூமியைச் சுத்திசெய்து தனது இடதுகாலால் மும்முறைஇடத்தைத்தட்டியுட்காரல்வேண்டும். முழங்கால், தொடை இவைகளுக்கிடையில் உள்ளங்காலைப் புகா விட்டுச் சமாதியுடன் பிரணவமுதலிய மந்திரங்களால் கரசுத்தி, தாளந்திரயம், திக்பந்தன முதலியவை செய்து குருமுதலியவரை நமஸ்கரித்துப் பூதசுத்தி செய்துகொள்ளல் வேண்டும். பிறகுபிராணாயாமஞ் செய்தல்வேண்டும். பெருவிரல் சுண்டுவிரல் பவித்திரவிரல் இவைகளால் மூக்கைப் பிடித்துச் சுவாசத்தை யொடுக்கிவியாஹ்ருதி, காயத்ரி, சிரஸ் இவைகளை மனதால்மூன்றுமுறை யுச்சரிக்கவேண்டும். பிராணவாயுவைத் தகைந்

துகொள்ள ஆற்றலற்றவன் அந்த மந்திரத்தைப் பத்தின் முறை ஜபித்தல் வேண்டும். ஒவ்வொரு மந்திரத்தின ரிஷி, சந்தம், தேவதை இவைகளை முறையே தலை, முகம், மார்பு இவ்விடங்களிலசுட்டிச் செபித்தல் வேண்டும். "மந்திர தேவதாப்பிரகாசிகை" என்னும் புத்தகத்தில் பிரணவ வேதாந்தியானத்தில் "திவ்யரூபதிவ்யாபரண திவ்யாயுதங்களணிந்த ஸ்ரீமந்நாராயணனது திருமேனி எடுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இனி வியாகிருதிகளுக்கும் காயத்திரிக்கும் முன்போல ரிஷி, சந்தம், தேவதைகளைத் தியானித்தல் வேண்டும். ஸ்ரீ காயத்திரி தேவதையின் திவ்யரூபம் மந்திரசாஸ்திரத்திற்சொல்லப்பட்டிருக்கின்றது "முத்து பவளம், பொன், நீலம், வெண்மை இந்நிறங்கள் பொருந்தியதும் முக்கண் பெற்றதுமான முகங்களுடனும், தலையில் திங்கட்கலைதுலங்கச் சாவதத்துவமயமாய்நின்ற திருமேனியும், வரம், அபயம், அங்குசம், கசை, கபாலம், கயிறு, சங்குச் சக்கிரம், இருதாமரைமலர்கள் இவைகளைக்கையிலணிந்துமுள்ளாள்" என்பது பிரஸ்என்னும் மந்திரத்திற்கு ரிஷி பரமமா என்றும், சந்தம் எஜுர் என்றும், பிரமன், அக்கினி, வாயு, சூரியன் இவர்கள் தேவதைகளென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பிராணயாமத்தால் பாபங்களெல்லாம் தொலையுமென்பது ஆன்றோர்கொள்கை. காயத்திரி ஆவாகன மந்திரத்திற்கு ரிஷி, சந்தம், தேவதைகள் இவைகளைத் தியானித்துக் காயத்திரியை ஆவாகனஞ் செய்தல் வேண்டும். யோகயாக்ஞவல்கியத்தில் "பார்க்கன், விஷ்ணு, புருஷன் என்னும் பெயர்களை வகித்தவனும், சத்தியரூபனும் உருவற்ற கடவுளைத்தியானித்து முக்திபெறுவான்" என்றிருக்கின்றமை மாலை

யால் அல்லது பவித்திரவிரலில், கடைப்பெருவிரல்முதல் சுட்டு
விரல் அடிப்பாகம் வரையிலாவது எண்ணி வரவேண்
டும். காயத்திரி ஜபிக்கையில் இவ்விதக்கணக்கின்படிச் சிறப்
புடைத்து 1008, அல்லது 108, அல்லது 28ஆவது ஜபிக்க
வேண்டும். பத்துமுறை ஜபித்தல் சர்வாதமமென வேதங்
கூறுகின்றது ஜபத்தின் இடையில் சூத்திரர், பதிதர், பாத
விடாய்காலத்திலுள்ள மாதர்கள், மீராகர், பறையிவை
களைக்கண்டால் தண்ணீரைத் தொடவேண்டும். இவை
களுடன் பேசநேர்ந்தால் ஸ்நானஞ்செய்தல் வேண்டும்.
வீணாய்ப் பேசிலாது ஜபத்தை முடித்தல் வேண்டும்.
“எவ்விதத்திலாவது காரியத்தில் குறையுண்டானால் கட
வுளை நினைப்பதால் அப்போது குறையற்றதாகு” மென்று
பிரஜாபதி கூறுகின்றார்.

ஹோமம், தானம், பிரதிக்கிரகித்தல், போஜனம்
ஆசமனீயம், ஜபம் இவைகள் செய்யுங்கால் கைகளிர
ண்டும் முழங்கால்களுக்குள்ளிருத்தல் வேண்டும் இனி
க்கடவுளை வணங்கும் பொழுதும், வலம் வரும்பொழு
தும், வழிபடும் பொழுதும் வேள்விகளிலும், ஆசிரிய
ரைக் கண்டவிடத்தும், ஆன்றோர் சந்நிதியிலும், கழுத்
தில் வஸ்திரத்தைச் சுற்றியிருத்தல் கூடாது ஆசாரி
யன், பெரியவர்கள், திவ்வியாலயங்கள், தண்ணீர், அரச
மரம், அக்கினி, சூரியன் இவைகளைப் பின்புறத்தில்
நிறுத்தி ஜபஞ்செய்தல்கூடாது. “கொப்புளுக்குக்கீழான
அங்கங்களைத் தீண்டில் தனது கைகளைத் தண்ணீ
ரால் சுத்தி செய்யவேண்டும். அல்லது வலது செவி
யைத் தொட்டுக் கடவுளை ஒருவாறு தியானித்தல் வே
ண்டும்.” என்று எமன் கூறுகின்றார். தலையிற் பாகை

தரித்தும், நிர்வாணியாயும், தலையிலாவிழ்த்தும், உள்ள
ங்கலங்கியும், கோபங்கொண்டும், ஊருறைசமேலிட்டும்,
படுத்தும், நடந்தும், பாய்களிலுட்கார்ந்தும், பாதுகை
தரித்தும், வாகனமேறியும், கால்களை நீட்டியும், உயர்ந்
தாசனத்தில வீற்றிருந்தும், இருளடர்ந்த விடமிருந்தும்,
விசாலமான விடத்திலுட்கார்ந்தும், தெருவில நின்றும்,
ஜபஞ்செய்தல கூடாது. சைமூடாமலும், தலையைமூடியா
மலுஞ்செபித்தல குற்றத்திற்கிடமாம். ஜபகாலத்திலநகை
த்தல கூடாது பக்கங்களிற் பார்க்கலாகாது காலை
யில தனது நாசிக்கு எதிரிலும், பகலில தோள்களுக்கு
எதிரிலும், மாலையில கொப்பூழுக்கு எதிரிலும், கைகளை
வைத்து ஜபித்தலவேண்டும். ஜபகாலத்தில மந்திரங்க
ளின பொருளை நினைத்து வரவேண்டும். காயத்திரிமந்
திரத்தைப் பாதத்துடன பாதம் சேர்க்காது ஜபித்தால
அது பெரும் குற்றத்திற்கிடமாகு மெனறும், அதைப்பி
ரித்து ஜபஞ்செய்யின்பாபங்களைவிலக்குமென்றும் ஆன்
றோர் கூறுவதால், பாதம்பாதமாகப் பிரித்தே ஜபஞ்
செய்தல வேண்டும். விசுவாமித்திரர் கூறுவதாவது: —
"மூன்று வேதங்களையும் ஏனைய எவ்விதக் கருமங்களையு
மனுட்டிக்காது ஒழியினும் காயத்திரி மந்திரத்தை
விடாது ஜபிக்கும் ஓர் அந்தணன் வேதியர்திலகமாவான்"
என்பது ஜபத்தின் இறுதியில பிராணாயாமஞ் செ
ய்தல வேண்டும். "ஜபத்திற்கு முன்னும் பின்னும் மும்
மூன்று பிராணாயாமங்கள்செய்யவேண்டு" மென்று கிரம
தீபிகை என்னும் நூல அறைகின்றது. "உத்தமே"
என்றற்றொடக்கத்தின் மந்திரத்தால காயத்திரியையதா
ஸ்தானத்திலனுப்பித் தத்தம சாகைகளில் விதிக்கப்பட்

ட மந்திரங்களால் உபஸ்தானஞ் செய்தல் வேண்டும். ஸ்மிருதியர்த்தசார மென்பதில் வணங்கும் வழி இத்தன்மைத் தென வெடுத்துப் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது. "தமது இருசெவிகளை யிருகைகளால் தொட்டுப் பிமது முழங்கால்கள் முதல் கால் பெருவிரல் காறும் பிருதுவாகத் துடைத்துக் காயத்திரி திசைகள், சந்தியா தேவி, பெற்றோர், மற்றைய பெரியோர், சிஷ்டர்கள் இவர்களை வணங்க வேண்டுமென்பது "தமது ஆடைகளை க்கிருபயின் தண்ணீரிற்றோனேனோ ஜபஞ் செய்தல்வேண்டும். தர்ப்பணம், ஆசமனீயம், ஜபம் இவைகளை நின்றுகொண்டே செய்தல்வேண்டும் பிரதக்ஷணஞ் செய்தல் கூடாது" என்று அரித மொழிகின்றார். தாமறிந்தும் அறியாமலும் நேரிடும் பலபல குற்றங்களுக்குக் கடவுளது திருநாமமே பெரியபிராயச்சித்தமாம் ஆகலாற்றான் ஜாபாலி "கடவுளது திருநாமமே ஜபிக்கற்பாலது, படிக்கற்பாலது, அதனால் யாமடையும் பயன் அளவிறந்தது" என்றார். காத்தியாயன மாமுனியும் 'சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் கடவுளது திருநாமமே குற்றங்களுக்குங் கதி எனவும், அறிந்தறியாக் குற்றங்களுக்கு அதுவே பிராயச் சித்தமெனவும் துணியப்பட்டுள்ளது" என்றார். ஜபம் என்பது இருமைப்பயனையுந் தரத்தக்கது இம்மையில் பிசாசமுதலிய பிணிகளை நீக்குதலானும், மறுமையிற் பாவங்களையொழித்துப் பரமசுகங்களைப் பயக்குதலானுமென்றறிக. ஜபத்தால் தேவதைகள் புகழின் அக்கடவுளர் எம்மிடத்திருவுளம் பெற்ற அவரது திருவருளால் கருதிய பயனைப்பெறுவோம் யக்ஷர், அரக்கர், பிசாச முதலிய

பிணிகளை விலக்குவோம எவ்விதப் பிணிகளும ஜபதத்
பராகிப எம்மிடமணுகா தொழிவனவே" என்று அரி
தா சாற்றுகின்றார். மனு கூறுவதாவது—"விதியக்கிய
த்திலும் ஜபயக்கியம் பதின்மடங்கு அதிகம என்பது.
அவரே மற்றோரிடம "ஜபத்தாற்றான் சித்திபெறுவான்"
என்று தொடங்கி "ஏககன்மங்களைச் செய்யினும செய்
யாவிடினும இவ்வொன்றே அந்தணர்க்குச் சித்தியளிக்
கு"மென்றார். கீதாசாத்திரத்திலும் யக்கியங்களுக்குள்
ஜப யக்கியந்தான் கடவுளது திருவாக்காமைந்திரு
க்கின்றது "முமுக்ஷுக்களுக்கு நாராயண அஷ்டாக்ஷ
ரம ஜபிக்கவேண்டு மென்று தார சாரோப நிஷதங்கூறு
கின்றது அங்கு"ஓம நமோ நாராயணாய" என்ற இத்தார
கத்தை யுபாசித்தல வேண்டும்" என்றிருக்கின்றது.
நாராயணோப நிடதத்தில அதனால யாம பெறும் பெரும
பேறைபபறறி எடுத்தோதப பட்டிருக்கின்றது. 'ஆயுள்
பெறுவான், பிரஜாபதித் தன்மையடைவான், ஐசுவரிய
த்தைப பெறுவான், முத்திசுகமெய்துவான்" என்று.
சிவோபாசகா களாயுள்ளவர்களுக்கு ஸ்ரீபஞ்சாக்ஷர ஜப
ஞ்செய்யவேண்டுமென்பப பல சுருதி ஸ்மிருதி புராணங்
கள் பறைபறைகின்றன. சாதாதபர் "ஜபகம், நமகம
இவைகளைஜபிப்பவனை நமது கருணையால கணைணுதலநா
ஆட்கொளவார" என்றார். சௌனகா 'வேதங்களிற்
பறபல பெருமந்திரங்களிருபபினும, அவைகள் அத்தியா
த்துமவா திகம்பொருளை விளக்கினும,புருஷ சூக்தத்திலும
மேமபாடுடையமந்திரம வேறிலலை. இம்மந்திரம் பிராயச்
சித்தங்களிலும், கடவுள் வழிபாடுகளிலும், மோக்ஷார்த்த
ஜபத்திலும,வசியத்திலும்,அக்கினியுபஸ்தானத்திலும, பு
த்திரபபேறு பெறுதலிலும், மற்றெவ்விதக் கன்மங்களின

பயன் கிடைக்கக்கண்டினதிலும், ரோக நிவர்த்தியிலும், காலன் வெற்றியிலும், மற்றும் அனேக விஷயங்களிலும் முனிகளால் விதிப்பிக்கப்படுகின்றது என்றார். இனிக் கிரகஸ்தர்கள் ஔபாசனஞ் செய்வதைக் குறித்துரைப்பாம். 'விவாகஞ் செய்த பிறகு ஓர் இமைப்பொழுதேனும் அக்கினியின்றி யிருக்கல் கூடா'தென்று காகாசாரியர் கூறுகிறார். பிரமசாரியனுள்ளவன் சமிதாதானஞ்செய்தல் வேண்டும். ஔபாசனத்தின் பின்னர் ப்ரம்மஎக்கியம்செய்தல் வேண்டும். 'டைடீசி' என்பவர் மொழிவதாவது —'தத்தமசாகைகளை அத்தியயனஞ்செய்தலே ப்ரம்மஎக்கியமெனப்படும். அதனைச்செய்பவர் பிரமலோகத்தைப் பெறுவார்' என்றார். வேதாத்தியயனஞ்செய்யாதவர் ப்ரம்மஎக்கியத்திற்குப்பதிலாகக் காயத்திரியைச் செபித்தல்வேண்டும். மனு 'நித்திய விதிகளைச் செய்து தண்ணீர்க் கரையில் அல்லது கானகத்திற் சென்று காயத்திரியை ஜபித்தல் வேண்டு'மென்றுரைத்திட்டார். சங்கிரகமென்னுங்கிரந்தத்தில் 'பிரமஎக்கியத்தியாலே சதியாளித்துப் புருஷசூக்தத்தை ஜபிப்பவன் சாலவே தபாராயண பலத்தைப் பெறுவான்' என்றிருக்கின்றது. இனிக்காண்ட ரிஷிகளையும் நான்குவேதங்களையும் இதிகாசபுராணங்களையும்தேவரிஷிபிதுருக்களையும் உச்சரித்துத் தர்ப்பணஞ் செய்வதைப்பற்றிக் கூறுவாம். ஆற்றலற்றவனுக்குத் தர்ப்பண விதியைக் குறித்துக் காத்தியாயனர் சுருக்கி விதித்திருக்கின்றார். 'பிதா வம்சத்தினரும், மாதா வம்சத்தினரும் எம்மிடம் தர்ப்பண உலகத்தை எதிர்பாரும் மற்றவரும் இவ்வுலகத்தைக் கொள்வாராக'வென்றும் மாதவியத்தில் 'ப்ரம்மஸ்தம்பம் வரை

யிலுள்ள பிராணிகள் திருப்தி எய்துக என்றுச்சரித்து மூன்று முறை தண்ணீரை எடுத்து விடுவாருக' என்று சங்கிரக தாப்பணம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இடது கைப்பெருவிரலடியில் திலங்களை வைத்து மற்றைப் பெருவிரல்களாலெடுத்துத் தர்ப்பணஞ் செய்தல்வேண்டும பெருவிரல் சுட்டுவிரல் இவ்விரண்டு விரலகளினாலும் திலத்தை எடுத்துத் தர்ப்பணஞ் செய்தலகூடாது. ஞாயிறு வெள்ளி திரயோதசி அஷ்டமி, ஜன்மானுஜன்ம நக்ஷத்திரங்கள் இவை கூடியகாலத்தில் திலஙகளும அக்ஷதைகளும் கலந்து தர்ப்பணஞ்செய்தலவேண்டும.

இனிக் கடவுள் வழிபாட்டை எடுத்துரைப்பாம. அஃது சுருதி ஸ்மிருதி கிரஙிய சூத்திரம புராண முதலியவற்றால் விதிக்கப்பட்டது. ருக்குவேதத்தில "த்ருவஃ வாஂதஂ" என்று தொடங்கிய மந்திரம அவ்வழிபாட்டை விதிக்கின்றது. 'ஸ்மிருதிசந்திரிகை' என்னுமோ, நூல் தத்தஞ்சாகைகளுக்குரிய கிரியைகளை முடித்தும அக்கினி ஹோத்திரஞ்செய்தும் திருவாராதனையும திருமாலினது வழிபாட்டைச்செய்யவேண்டு' மென்றெடுத் துரைக்கின்றது. பிறகு தேவர்களை நமஸ்கரித்துத்தனநிலலத்திற்புருஷ விதிவழுவாதபுருஷ சூக்த மந்திரங்களால் கண்ணனை வழிபடுவாருக' என்று ஹரித முனி சாற்றுகின்றார். வைகாநசக்கிரியத்தில 'அக்கினியில நித்திய ஹோமம் முடித்து மறை முறை மாறாது மாலைவழிபட்டால் ஏனையக் கடவுளர் எல்லோரும் அர்ச்சிக்கபபட்ட வராவா' என்று தொடங்கி மற்றைய எக்கன்மங்கள் குறைவை யெய்தினும் அக்குற்றங்களை விலக்கக் கருதி அகிலாந்தரியாமியாகிய நாராய

‘ணனை அர்ச்சித்தல் வேண்டும். ஆயினும் விஷ்ணுவினது பரமபதத்தைப் பெறுவானென்பது மறைகளின் முடிவு’ என்று இறுதிபெற்ற வசனங்களால் வெளியாகின்றது. போதாயனரும் ‘கடவுளர் பூஜையை எடுத்தோதுகின்றார். “ஸ்ரீருணிஷ்ணாவிவக்ரு ஓஉ, ஸ்ரீரு வைகுண்டஜாதேஹ என்றுதொடங்கும்மந்திரங்களால்தாமதாம்கொண்ட ஆன்மலிங்கங்களுக்கேற்ப ஆசனம், பாத்தியம், அர்க்கியம், ஆசமனீய முதலியவற்றை எடுத்தோதுவித்தல் வேண்டும்’ என்று தொடங்கி நாராயணன் பரமசிவம் இருமூர்த்திகளுக்கும் ஒரே பூஜையை விதித்தார். சௌனகர் ‘விநாயகன், ஆதித்தன், சத்தி, திருமால், பரமேசுரன், இவ்வைம் மூர்த்திகளையும் நாடோறும் வழிபடுவார் என்றார். மாபாரதத்தில் “பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் தீக்ஷைகளை பெற்ற சூத்திரர் இவர்களால் அன்புடன் ஆராதிக்கப்படுபவன் பத்மநாபனென்றார். சௌனகர் காலையில் விதிவழுவாது நீராடி மனச்சுத்தி எய்திப பரமேசுரனது சந்நிதானத்திலுட்கார்ந்து வழிபாட்டைத் தொடங்குவானாக’ என்றுரைத்தார். அபரார்க்கமென்னும் நூலில் ‘அஷ்டாக்ஷர மென்னும் மஹாமந்திரத்தில் திருமாலைப் பூஜை செய்வானாக”வென்றெடுத்தோதப்பட்டது. வியாசாசாரியர் “துவிஷௌ:” என்னும் மந்திரத்தாலும் புருஷசூக்தத்தாலும் ஆதிதேவதமிலாச்சோதியாதியாகிய அரியை அர்ச்சித்தல்வேண்டு மென்றார். பௌத்தமவியா ‘வில்வபத்திரத்தால் கோவிந்தனை ஒருவாறு அர்ச்சிப்பவன் உத்தமலோகங்களிலவனுடன் இகழ்வான நற்றுளசிகளாற் கடவுளின் பிம்பத்தை அர்ச்சிப்பவன் பெரும் பேற்றைப் பெறுவான். சாளக்கிராமத்தில் ஓர்

துளசியை இட்டவன் ஏகாதசியிலுபவாசஞ் செய்தவனை
பபோல் இருவினைபபபனை யொழித்திடுவான். பாத்திர
ங்களில அந்தணரைப்போன்ற பாத்திரமும், கோதானத
தைப்போன்ற தானமும், கங்கைக்குச் சமானம்போனற
தீர்த்தமும், துளசிக்குச் சமானமான பத்திரமும் உலகத்
திலில்லே. அன்புடன் கொடுத்தது பலம் பத்திர புஷ்பம,
புல,தண்ணீரானும் அதைக்கேசவன் ஏற்றுக்கொள்வான்'
என்று சொலலுகின்றார். பாத்மபுராணத்தில் நல்ல
ஹவிஸையும் மறறை எந்த நைவேத்தியத்தையும தே
வனுக்குக் கொடுக்கவேண்டும். நைவேத்தியங் கிடைக்
காவிடம பழங்களேனும, அவைகளும் கிடடாவிட்டுப
புல பூண்டுகளேனும், அதுவுங் கிடடாவிடததுத் தண்
ணீரானும நிவேதனஞ் செய்யவேண்டியது. மோகத்தி
ஞலாவது சோம்பலினலாவது தேவதார்ச்சனம் செய
யாதவாகள் கடூோமாகிய நரகத்தையும், பறவைகள் முத
லியவைகளின் ஜன்மத்தையுமடைவாாகள். எவர்கள்கள
ங்கமற்ற மனத்தால் விஷ்ணுவைபபூஜிக்கின்றார்களோ அவ
ாகளுக்கு மீணடும ஜனனமில்லே. சாண்டில்லியர் கூறு
வதாவது —"பூஜாகாலத்தில் ஹுங்காரமிலலாமலும்
பேசாமலும் மௌனமாக விஷ்ணுவை ஆாச்சிக்கவேண்
டும்" எனபது. பூஜைச்கு வேண்டிய உபகாரணங்கள்
அகப்படாவிடதது மனத்தினலேயாவதுதியானித்தல்வே
ணடும். அங்ஙனஞ் செய்கிறவர்களுக்குத் திருமால் எல
லாவற்றையும் அனுக்கிரகிப்பார். விஷ்ணுபூஜை செய்யா
தவர்களின் தானம் ஹோமம் தபசு இவைகள் பிரேதத்தி
ற்குச் செய்த அலங்காரம்போல வாளாமுடியும். வேற்
றுமைப்படாத ஒரே குடும்பததிலிருக்கும் சகோதரர்களு
க்குக் கடவுள் வழிபாடொன்றே. அதாவது ஒருவனே

செய்தாற்போதியது. "சங்கிரகமென்னும புத்தகத்தில் ஓர் சமையற்சோற்றைக்கொண்டு பிழைக்கும் குடும்பத்தினர்க்குப், பிதுர்கள், தேவதைகள், பிராமணர்கள இவர்களின பூஜை ஒன்றே போதுமானது. வேற்றுமைப் படின் அவர்களுக்கு வீடுகடோறும் வெவ்வேறாகவே செய்தல் வேண்டும். "வஸ்திரம், அலங்காரம், தைல முதலியமற்றைய பொருட்கள், மருந்து இவைகளைக்கடவுளுக்கு ஆப்பித்தே யுட்கொள்ளல்வேண்டும்" என்று சாண்டில்ய மகரிஷியினுடைய கருத்து. நாரதர் சாற்றுவதாவது:—"புருடசூக்தமென்னும மகாமந்திரத்தால் புஷ்பங்களேனும், மற்றைத் தண்ணீரேனும கடவுளுக்குக் கொடுத்தால் இதனாலுண்டாகும் பயன் அளவிறந்தது" என்பதே. பூஜைக்குப்பிறகு 'ஜிதந்தெ ஸ்வம்பரீகாக்ஷ என்று தொடங்கிய தோத்திரத்தால் நாடோறுங் கடவுளைத் துதித்து அவரது மலரடி பணிந்து தன்னை அவருக்கு அர்ப்பித்திடுவானாக. வியாசர் கூற்றியாதெனில — "விட்டுணுவினது பாததீர்த்தமானது பற்பல பாவங்களையொழிக்கும். அதே தண்ணீரைத் தரையில காரணமின்றி வீழ்த்தினால் ஏண்மடங்கு பாபங்களை விளைவிக்கும கடவுளது திருவடித் தீர்த்தத்தை யுட்கொண்டு கையைக் கழுவுதல கூடாது. கழுவின் அதுகொடிய தீவினைகளுக்கிடமாகும்" என்பது. சந்திரிகை யென்னும புத்தகத்தில் உள்ளத்தில கடவுளது திருமேனியும் முகத்தில அவரது திருநாமமும் வயிற்றில் அவரது நைவேத்தியமும் சிரசில் அவருக்கு அர்ப்பித்த புஷ்பமும் பாதோதகமும் எவனிடமிருக்குமோ அவனே அச்சுதன். பக்விருசடரிசிஷ்டத்தில "தேவதைகள், சித்தர்கள், இருடிகள் இவர்களாவிட்டுணு நைவேத்தியம் மிகச்சிறப்புடைத்தென்றும் ம

றைய தேவதைகளுக்களித்த நைவேத்தியம் அங்ஙனமல்லவெனவும், அதை யுட்கொள்ளின் சாந்திராயண விரதமனுஷ்டிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. வியாசாசாரியார் நித்தியம் ஹரியைப் பூசித்தபிறகு ஸ்ரீபஞ்சாக்ஷரமுதலிய பற்பல மந்திரங்களால் மலபரிபாகியாகிய ஒருவனையே கண்ணுதற்பிரானைப் பூசிக்கவேண்டுமென்றார். சாளக்கிராம முதலிய கற்களில் கடவுளை வழிபடவேண்டுமென்றிய பிரதிமைகளிற் பூசித்தற்கு விதியெங்குங்காணோமே எனின் "பாரதத்தில் அழகிய திருமுகமும் திருக்கண்களுமமைந்த ரூப பிம்பங்களைத் தமது கருத்திற்கிசைய வமைத்து அதை பூசிக்கவேண்டும், அதை வணங்கவேண்டும், அதைச் சிந்திக்கவேண்டும், அதைத் தியானிக்கவேண்டும்" என்று பிரதிமாராதனத்தை நேரில் விதித்திருப்பதால் அதைப்பற்றி இங்கு விரிவாக வரையவேண்டியதாவசியமில்லை. எவ்விதத்திலும் கடவுள் பூஜையின்றிப் புசித்தல்கூடாது. "ஒவ்வொரு தினத்திலும் ஸ்நானம், சந்தியை, ஜபம், ஹோமம், கடவுள் வழிபாடு, அதிதிகளைப் பூசித்தல், வைசுவதேவஞ்செய்தல், ஆகிய ஆறு நித்தியகிரியைகளென்று பாராசரர் முதலிய ஆன்றோர்களால் கடவுள் பூஜை நித்தியமென எடுத்தோதப்பட்டதாமென்க. தேவலரென்பவர் கூறுவதாவது—"தேவர்களுக்கெனவும் அந்தணர்களுக்கெனவும் பாகஞ்செய்யாது தனக்கெனப் பாகஞ்செய்பவன் யாண்டும் பாவியாவான்" என்றார். மநுவும் "தேவர்கள், இருடிகள், மானுடர்கள், பிதுர்க்கள், வீட்டிலுள்ள தேவதைகள் இவர்களைப் பூசித்தபிறகே இல்லறத்தவன் புசிப்பானாக" என்று சாற்றியிருக்கின்றார். சூரியன் உதித்தபிறகு பத்துநாழிகையளவு முற்பகலென்

லும் ஏற்படுகின்றது. அக்கடைப்பகலில் மாத்தியாஹ்நிகானுட்டானஞ்செய்தலவேண்டும். பிறகு வைசுவதேவமனுஷ்டிக்கவேண்டும். அதைத் தந்தஞ் சாகைகளிற் கூறியபடி அனுஷ்டித்து முடித்தலவேண்டும். அவ்விதமே ஸ்மிருதிகளின் கருத்து. "வைசுவதேவஞ்செய்யாது போசந்தினங்களில் புசிக்கும் அந்தணர் காலசூத்திரமெனனும் நரகத்தைப்பெறுவார்" என்று வசிஷ்டர் அறைகின்றார். பிறகு அதிதி பூசை புரிதலவேண்டும். அதிதியினிலக்கணம். தூரத்தினின்று வந்தவனும், வைசுவதேவகாலத்தில் நிகழ்ந்தவனும், சுபக்கிராமத்தவனல்லாதவனும், தன்னை முன்னறியாதவனு மென்பதே. "அதிதியும், பிரமசாரியும் பக்குவஞ்செய்த அன்னத்திற்கு உரியவராதலால் அவருக்கு அன்னங் கொடாது புசித்தல் கூடாது" என்று பராசரர் மொழிகின்றார் "எங்கு 'அ துறவி புசிக்கின்றானோ அங்கு ஹரியே புசிக்கின்றார். எங்கு ஹரி புசிக்கின்றாரோ அங்கு உலகமெலாம் புசிக்கின்றது" என்று கௌதமர் சொல்லுகின்றார். சாதாதபரின் அபிப்பிராயம். "எவன் வீட்டிலுட்புகுந்த அதிதி தான் விரும்பியதை யடையாது திரும்புவான் அங்கு தப பாபத்தை யொழித்து அவனது புண்ணியத்தை யடைந்து செல்வான்" என்றார். ஸ்மிருதி ரத்தினத்தில் "சூரியோடம்' என்னும் அதிதி திரும்பும் பாபம், கணனிலைத்தனின்று அன்னம் பெறாத அதிதி பகற்காலத்திற் திரும்புவதாலுண்டாகும் பாபத்தினும் எண்மடங்கு அதிகம்." சூரியோடனென்றால் இரவில் வரும் அதிதி. 'புல்லும், நிலமும், தண்ணீரும், நல்வார்த்தையும் பெரியோர் வீடுகளில் எக்காலமும் குடிகொண்டிருக்கும்" என்று [illegible]னு

எடுக்கோதியதின் கருத்து யாதெனில், பெரியோர் புகு
ந்தவிடம் ஆசனமில்லாவிடில் புலனும். படுக்கையில்லா
விடத்துப் பூமியும், அக்கினிபாத்திரங்களில்லாவிடத்துத்
தண்ணீரும், அன்னமில்லாவிடத்து நல்ல வார்த்தையும்
என்பது

வெண்கலப்பாத்திரத்தில் இளநீரும், தாமிரப்பாத்திரத்
தில் தயிர், மோர், நெய், பால், கரும்பின் சாறு, தேன்,
உப்புடன் சேர்ந்த பொருள்கள் ஆகிய இவைகள் கள்ளுக்
குச் சமானமாகுமாதலால் அவைகளை யுட்கொள்ளுதல்
கூடாது அவசியங்கொள்ளின் இதுவியப் பக்ஷீதா"
என்றபடி க்ருடக்கத்தில் பாத்திரத்தை ஸ்பரிசித்துச் சிறிது
தண்ணீருட்கொள்ளவேண்டும் அடியிற் குறிப்பிட்ட
பிரகாரம் போஜனஞ்செய்தவுடன் கடைசியில் உத்தராபோச
னம் வாங்கி அதில் மிகுதியான தண்ணீரைக் கீழே வார்
ப்பாடும் மந்திரத்தால் பூமியில் விடவேண்டும் அம்மந்
திரம் "ரௌரவேபுண்யநிலயே பத்மார்புதநிவா
ஸிநாம் அர்த்திநாம் உதகம் தத்தம் அக்ஷய்ய முபதிஷ்டது"
என்பது. உத்தராபோசனத்திற்குமுன் கையைக் கழு
வுதல்கூடாது அதற்குப்பின் கையால் போஜன பாத்
திரத்தைத் தொடக்கூடாது தொழின் கட்டிய துணி
யுடன் ஸ்நானஞ்செய்தல்வேண்டும் பிறகு கையைச்
சுத்திசெய்து பன்னிருமுறை தனது இடதுபுறத்தில் வா
ய்கொப்பளிக்கவேண்டும். அங்ஙனஞ்செய்யும்பொழுது
முகத்திலுள்ள நீரை யுட்கொள்ளக்கூடாது. முழங்கால்
வரையில் கால்களைக் கழுவிச் சிறு குச்சிகளால் பற்களைக்
கிளையவேண்டும். பிறகு ஆசமனீயஞ்செய்தல்வேண்டும்.
ஆசமனீயஞ்செய்வதற்குமுன் சூத்திரர் முதலியவர்களை

ப்பார்த்தல் கூடாது. "ஆசமனீயஞ்செய்து கௌமாடு
ஊாகு' என்னும் மந்திரத்தால் வலதுகாற் பெருவிரலி
னது கைபினின்று தீர்த்தத்தை விடவேண்டும். பிறகு
உட்கார்ந்து அசைவற்ற மனதினை யடைந்து கடவுளைத்
தியானிக்கவேண்டும். பிறகு தாம்பூலந் தரித்துக் கொள்
ளவேண்டும். வெற்றிலையின் அடியை மென்றால் வியா
தியும் நுனியை யுட்கொண்டால் பாபமு முண்டாகும்.
சுண்ணாம்பு வைக்கப்பட்ட வெற்றிலையை மேலவின் ஆயு
ளைக் குறைக்கும். அதன் நரம்பு புத்தியை ஒழிக்கும்.
ஆதலின், அடி நுனி நரம்புகளைப் பறித்தும் சுண்ணாம்பு
வைத்திருந்ததை நீக்கியும் பிறவற்றை யுட்கொள்ளுதலும்
வேண்டும். வெட்டாத பாக்கும் தண்ணீரை விட்டுக்
கழுவாத வெற்றிலையும், நன்றாகச் சோதிக்கப்படாத
சுண்ணாம்பும் உட்கொள்வதால் குற்றங்கள் பலவுள. வா
யில் வெற்றிலையில்லாமல் வெறும் பாக்கை மென்றால்
அவன் ஏழுஜன்மத்திற்கு தரித்திரனும் நரகத்திற்கும் பாத்
திரமாவான். எக்காலத்திலும் தாம்பூலம் உட்கொள்ள
லாகாது. அவ்விதஞ்செய்தால் ஆயுள், பிரக்ஞை, பல
ம், வீர்யசக்தி இவைகள் குன்றும். நாவில் ஒருவித சுவை
யுமறியமுடியாது. அத்திரிபகவான் கூறுவதாவது —
பகல் தூக்கமும் பெண்களுடன் உறவும் கூடாது. இவைக
ளை செய்தால் ஆயுட்குறைவும், பெண்களுடன் புணரின்
புண்ணியக்குறைவு முண்டாகும். அக்காலத்தில் இதிகா
சம், புராணம், தர்மசாஸ்திரம் இவைகளைப் படிக்கவே
ண்டும். வீண்வார்த்தைகளையும் பிறரைக் குற்றங்
கூறுதலையும் நீக்கவேண்டும் என்பது. வியாசாசாரியார்
கூற்று:—சூரியன் அஸ்தமனகாலத்தில் அவசியம் வீட்

டையிட்டு வெளிப்பட்டு மாலைக்கடனை முடிக்கவேண்டும். எவன் குசங்களைக் கைக்கொண்டு கருத்தைக் கடவுள்பாலிருத்தி வெளியில் மாலைக்கடனை முடிப்பானவன் பொய், கள் ஈற்றம், பகலில் தூக்கம், பெண்ணுறவு, சூத்திரான்னபோசனம் இவ்வகைக் குற்றங்களை விடொழிவான். மாலைக்கடனை முடித்தபிறகு ஔபாசனஞ்செய்து கடவுளை வழிபட்டு அதிதிகளைப் பூசிப்பிக்கவேண்டும் என்பது. சௌனகர் கூறுவதாவது.—

“ஜபம், ஹோமம், பூஜை, வேதாத்தியயனம் இவைகளை இரவின் முற்பாதியிற்றானே செய்தல்வேண்டும். பிறகு சுகந்தம், தாம்பூலம் முதலியவற்றைக்கொண்டு குடியில்லா வீடு, தேவாலயம், நடப்பு வழி, தானியசாலை, தேவர், பிராமணர்கள் இவர்களின் முன்னிலை முதலியவிடங்களையொழித்துக் கிழக்கு அல்லது தென்பாகத்தில் தனது சிரசை வைத்துத் தம்மில்லாளுடன் நித்திரை செய்தல்வேண்டும். மேற்புறமும் வடபுறமும் சிரசைவைத்துறங்கல்கூடாது. தன்னூர்விட்டு வெளியூரில் மேற்கே தலைவைப்பினும் வைக்கலாம். எக்காலத்தும் வடக்கில் தலையை வைத்தல்கூடாது. தனது தூங்கிடமு சமீபத்தில் வைத்துக் கருடமந்திரங்களால் ரக்ஷை செய்து சயனித்தல்வேண்டும். தலைப்புறத்தில் தண்ணீர்ப்பாத்திரம் ஒன்று வைத்துக்கொள்ளல்வேண்டும் என்றுரைக்கின்றார். ரத்நாவலி என்னும் புத்தகத்தில் நித்திரை செய்யும்பொழுது பகவானைத் தியானித்து நித்திரை செய்யவேண்டுமென்றும் “இரவும் பகலும் நிர்மதைக்கு நமஸ்க்கரித்து விஷசர்ப்பங்களினின்றும் தன்னைக்காக்கவேண்டுமென்றுஞ் சொல்லியிருக்கின்றது. பெண்களுடன் ருது

காலத்திற் கூட்டுறவு செய்யாமே மனிபஞ்செய்து கொ
பது மாதவிடாய் கண்டதுமுதல
அவற்றுள் முதனான்கு தினங்களை வலதுகாற் பெருவிரலில
ருதுகாலங்களில் உபவிதமாகவும், மறையகாலங்களில
விவிதியாகவுமிருக்கவேண்டும். இருவரும் உடையின்றி
யிருத்தல் கூடாது இரண்டு யாமங்களுக்குமேல் பெ
ண்களுடன் சயனிக்கலகூடாது. அக்காலம் படுக்
அவர்கள் முகத்திற்குச் சுத்தியுண்டு மிதமாகப் புசித்து
நூறுமுறை ஜபித்து நூறடி நடந்து இடதுபுறங்களைக்கீழ்
வைத்துப் படுப்பவனுக்கு வைத்தியந்தாற் பலன் யாதிரு
க்கின்றது என ஓர் மகரிஷி கூறுகின்றார் பாரதத்தில
ஒருவருக்கு இனிய பொருளை அடிதலகூடாதென்றும், ஒர
பொருளைப்பற்றி ஆலோசித்தல கூடாதென்றும் வழிநட
க்கக்கூடாதென்றும், பலர் தூங்க ஒருவன் விழித்திருக்
கக்கூடாதென்றுஞ் சொல்லியிருக்கின்றது இனிச சயன
காலத்தில அடியிற்கண்ட செய்யுளைப் படிக்கலாம
[illegible]
[illegible]
[illegible]"

[illegible] முற்றிற்று.